வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු




Email : news@eelanadu.lk மலர் : 05 27.11.2023 திங்கட்கிழமை இதழ் : 351 பக்கங்கள் : 12

# இன்று மாவீரர் நாள்

## உணர்வுபூர்வ அஞ்சலிக்கு தமிழர் தாயகம் தயார்!



**யாழ்ப்பாணம், நவம்பர் 27**

**தமிழ் மக்களின் உரிமைக்காக போராடி தமது இன்னுயிர்களை ஈகை செய்த வீரமறவர்களை உணர்வெழுச்சியுடன் நினைவேந்த தமிழர் தாயகம் தயார் நிலையில் உள்ளது.**

வடக்கு, கிழக்கில் 25 இற்கும் மேற்பட்ட துயிலும் இல்லங்கள், மாவீரர் நினைவிடங்கள் மற்றும் விசேடமாக அமைக்கப்பட்ட மாவீரர் நினைவாலயங்களில் உணர்வெழுச்சியுடன் மாவீரர்கள் நினைவேந்தப்படவுள்ளனர்.

துயிலும் இல்லங்கள், மாவீரர் நினைவிடங்கள், விசேடமாக அமைக்கப்பட்ட மாவீரர் நினைவாலயங்கள்

11



## பிரபாகரன் பிறந்தநாள் யாழில் கொண்டாட்டம்!

யாழ்ப்பாணம், நவ. 27

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனின் 69ஆவது பிறந்ததினம் நேற்று யாழ்ப்பாணத்தில் பல இடங்களிலும் கொண்டாப்பட்டது.

பிரபாகரன் பிறந்ததினமான நேற்றைய தினம் அவர் பிறந்த இடமான வல்வெட்டித்துறையில் கேக் வெட்டி கொண்டாடப்பட்டது. பிரபாகரன் பிறந்த இல்லத்தின் முன்பாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் கேக் வெட்டினார். இதன்போது, அப்பகுதி மக்களுக்கும், வீதியால் பயணித்த மக்களுக்கும் இனிப்புகள் வழங்கிக் கொண்டாடப்பட்டது.

இதேபோன்று யாழ். பல்கலைக்கழகத்திலும் மாணவர்களால் கேக் வெட்டி பிரபாகரனின் பிறந்தநாள் கொண்டாடப்பட்டது. யாழ்.பண்ணை, நல்லூர் பகுதிகளிலும் இனிப்புகள் வழங்கி புலிகளின் தலைவர் பிரபாகரனின் பிறந்த தினத்தை மக்கள், அரசியல் கட்சியினர் கொண்டாடினர். (ஐ)

மாவீரர் நினைவேந்தலுக்கு

## கிழக்கு மாகாணத்திலேயே நெருக்கடி, தடை அதிகம்!

கொழும்பு, நவ. 27

மாவீரர் நாள் நினைவேந்தலுக்கு கிழக்கு மாகாணத்தில் அதிக நெருக்கடிகள் மற்றும் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தமிழ் மக்களின் விடுதலைக்காக போராடி தமது இன்னுயிர்களை ஈகை செய்த வீரமறவர்களை நினைவேந்தும் மாவீரர் நாள் இன்றாகும். மாவீரர்களை நினைவேந்த தமிழர் தாயகமான வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஏற்பாடுகள் அனைத்தும் பூர்த்தியாகியுள்ளன.

இந்த நிலையில், மாவீரர்களை நினைவேந்துவதற்கு பொலிஸ், படைத் தரப்புகளால் நெருக்கடிகள் மற்றும் தடைகள்

11



குமாராலய, சர்வாலய, கார்த்திகை விளக்கீடு தினமான நேற்று பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் சொக்கப்பனை எரிப்பு நடைபெற்றது. இதன்போது, முருகப்பெருமான் கைலாயவாகனத்தில் வெளி வீதியுலா வந்து பக்தர்களுக்கு காட்சி அளித்தார். (படம்: ஐ. சிவசாந்தன்)

## ஒக்.17இற்கு முன்னர் ஜனாதிபதி தேர்தல்

தேர்தல் ஆணையாளர்

கொழும்பு, நவ. 27

ஜனாதிபதி தேர்தல் அடுத்த ஆண்டு செப்ரெம்பர் 16 - ஒக்ரோபர் 17ஆம் திகதிக்கு இடைப்பட்ட காலத்தில் நடைபெற வாய்ப்புள்ளது என்று தேர்தல் ஆணையாளர் ஆர். எம். ஏ. எல். ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எனினும், ஜனாதிபதி தேர்தலுக்கான உறுதியான திகதி எதிர்வரும் ஜூலை மாதத்தில் அறிவிக்கப்படும் என்றும் அவர்

11

## 13 சிறுமிகள் கடத்தப்பட்டு வெளிநாட்டுக்கு விற்பனை!

கொழும்பு, நவ. 27

சிறுவர்களை கடத்தி வெளிநாட்டவர்களுக்கு விற்பனை செய்யும் குழு தொடர்பில் பொலிஸார் விசேட கவனம் செலுத்தியுள்ளனர். இந்தக் குழுவால் 13 சிறுமிகள் மலேசியாவுக்கு அனுப்பப்பட்டனர் என்று அறிய வருகின்றது.

இந்த சம்பவத்துடன் இடைத்தரகர் ஒருவர் ஈடுபட்டுள்ளார் எனவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேலும், இந்த குற்றங்கள் தொடர்பாக குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் கொழும்பு உயர் நீதிமன்ற நீதிவான் பிரசன்ன அல்விஸிடம் கடந்த நவம்பர் மாதம் 23 ஆம் திகதி அறிவித்திருந்த நிலையில் இது தொடர்பான விசாரணைகளை விரைவாக மேற்கொண்டு சந்தேக நபர்களை நீதிமன்றத்தில்

11



கடமையின்போது உயிரிழந்த

## பொலிஸ் உத்தியோகத்தருக்கு தேசபந்து தென்னகோன் அஞ்சலி

யாழ்ப்பாணம், நவ. 27

சந்தேக நபரை துரத்தி சென்றபோது ஆற்றில் குதித்து காணாமல்போன நிலையில் சடலமாக மீட்கப்பட்ட சாவகச்சேரியை சேர்ந்த கிருஷ்ணமூர்த்தி

11

## எம். ஓ. பி. உரத்தின் விலை ரூ. 9,000ஆக குறைவடையும்



கொழும்பு, நவ. 27

இந்த பருவத்தில் எம். ஓ. பி. (பண்டி) உரத்தின் விலையை 9 ஆயிரம் ரூபயாக குறைக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

19 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்ட எம். ஓ. பி. உர மூட்டை ஒன்றின் விலையை 9 ஆயிரம் ரூபாயாக குறைப்பதற்கு தாம் முன்வைத்த அமைச்சரவை பத்திரத்திற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்படி அரசாங்கத்துக்கு சொந்தமான இரண்டு உர நிறுவனங்களும் எம். ஓ. பி. உரம் 9 ஆயிரம் ரூபாய்க்கு வழங்கப்படும் என்று அவர் தெரிவித்தார். (ஐ)

# இப்படியும் நடக்கிறது

புலம்பெயர் தமிழர்களிடையே சில முற்போக்கான சிந்தனையுள்ள நண்பர்களை இணைத்துக்கொண்டு 'இலங்கைத் தமிழர் நலன்புரி அமைப்பு' என்ற பெயரில் அமைப்பு ஒன்றை ஒருங்கமைத்து வருபவர், அவுஸ்திரேலியாவில் வாழும் நண்பர் ராஜ் சிவநாதன். அவர் அவுஸ்திரேலியாவில் வாழ்ந்தாலும் அவர் எந்நேரமும் ஈழத்தைப் பற்றியும் இங்குள்ள மக்கள் பற்றியும் மட்டுமே சிந்தித்துக் கொண்டிருப்பவர்.

அவரிடமிருந்து ஒரு குறுந்தகவல் வந்தது. இலங்கை பாராளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதம் நடந்த மறுநாள் அது. அந்த விவாதத்தில் பேசிய தமிழ் தேசிய மக்கள் முன்னணி தலைவர் கஜேந்திரகுமார், “யுத்தம் முடிந்து விட்டபின்னரும் எதற்காக பாதுகாப்பு அமைச்சுக்கு இவ்வளவு அதிகமாக நிதி ஒதுக்கப்படுகின்றது” என்று கேட்டிருந்த செய்தியின் பிரதியையும் அனுப்பி, சுமந்திரன் ஏன் அது குறித்து பேசவில்லை என்ற தனது ஆதங்கத்தை எழுப்பியிருந்தார். கூடவே அவர் சுமந்திரனை இப்போதும் தமிழ் தேசியக் கூட்டமைப்பாகவே கருதிக் கொண்டிருப்பதும் அவரது கருத்தில் பிரதிபலித்தது.

அது குறித்து இனி இங்கே எழுதுவது என்றால் அதற்கே இந்தப் பத்தி போதுமானதாக இருக்காது.

ஆனால் பாதுகாப்பு அமைச்சுக்கு ஒவ்வொரு வருடமும் நிதி ஒதுக்கப்படும்போது ஒரு குறிப்பிட்ட வீதமானது அதிகரிக்கப்பட்டுவருவது பல தசாப்தங்களாகவே நடந்துவருவதுதான். அதற்குப் பிரதான காரணம் படையினரின் தொகை. அவர்களுக்கு வழங்கப்படும் சம்பளம் வருடா வருடம் ஒவ்வொரு படையினருக்கும் வருட சேவை அதிகரிப்புக்கான சம்பள அதிகரிப்பும் காரணம்.

யுத்தம் முடிந்துவிட்ட பின்னர் எதற்காக இத்தனை பெரிய படையை நாம் வைத்திருக்க வேண்டும்? அதில் குறைப்பைச் செய்து செலவை குறையுங்கள் என்றுதான் அரசாங்கத்தை வலியுறுத்தவேண்டும்.

அதுவல்ல நாம் இன்று இந்தப்பத்தியில் சொல்ல வருவது.

யுத்தம் முடிந்து பதின்நான்கு வருடங்களாகிவிட்ட பின்னரும் எதற்காக பாதுகாப்பு அமைச்சிற்கு அதிகநிதி ஒதுக்கப்படுகின்றது என்று கஜேந்திரகுமார் கேட்டது நியாயம் என்கிறார் சிவநாதன் என்பது மட்டும் தெரிந்தது.

யுத்தம் முடிந்துவிட்டது என்று கஜேந்திரகுமார் பேசிய அன்றைய தினம்தான் தமிழகத்திலிருந்து உணர்ச்சிக்கவிஞர் காசி ஆனந்தன், பிரபாகரனின் மகள் துவாரகா, இந்தியத் துணையோடு மீண்டும் போராட்டக் களத்திற்கு திரும்பவிருக்கிறார் என்று அறிவிக்கிறார். துவாரகா வருகிறார் என்பது எவ்வளவு நகைச்சுவையானதோ அதேவிட நகைச்சுவையானது இந்தியா அதற்கு துணை நிற்கும் என்ற அறிவிப்பு என்று பலரும் சமூக வலைத்தளங்களில் எழுதிவருகின்றனர்.

ஆனால் இதனை சாதாரண நகைச்சுவையாக கடந்துசெல்ல முடியுமா என்பது தெரியவில்லை.

இன்றைய மாவீரர் தினத்தில் துவாரகா வெளிப்படுவார் என்று புலம்பெயர் தமிழர்கள் சிலர் தொடர்ந்து கூறிவருவது எதற்காக என்பது நாம் எல்லோரும் புரிந்து கொள்ளக்கூடியது தான். ஆனால் இந்தியாவில் இருந்துகொண்டு, துவாரகா வரவிருக்கிறார் என்பதும், அதுவும் இந்தியத் துணையோடு வருகிறார் என்பதும் சாதாரணவிடயமல்ல. காசி ஆனந்தன் இதற்கு முன்னரும் இதுபோன்ற பல நகைச்சுவைகளை 'வடிவேல்' பாணியில் அறிவித்தவர்தான். ஆனால் இப்போது அவர் இந்தியாவையும் துணைக்கு அழைத்திருப்பது கவனிக்கப்படவேண்டியது.

இலங்கைக்கும் இந்தியாவிற்கும் இடையே நடந்துவரும் பூகோள அரசியல் கயிறுழுப்புக்கள் மத்தியில், உள்ளூர ஒரு யுத்தமே நடந்து கொண்டிருக்கின்றது என்பது இரகசியமானதல்ல.

இந்த வேளையில் இலங்கையில் மீண்டும் ஒரு போராட்டம் நடக்கவிருக்கின்றது என்றும் அதுவும் அது இந்தியாவின் துணையோடு நடக்கவிருக்கிறது என்றும் காசி ஆனந்தன் கூறுவதும், அதுவும் இந்தியாவில் ஒரு அகதியாக வாழ்ந்து கொண்டிருக்கும் நிலையில் அவர் கூறுவதும் சாதாரணமாக கடந்து செல்லக்கூடியதல்ல.

இந்தியாவையும் இலங்கையையும் மேலும் சிக்கலுக்குள் தள்ள எடுக்கப்படும் முயற்சியா இது என்பதையும் கவனிக்க வேண்டியது அவசியம்.

தெற்கில் சிங்கள கடும்கோட்பாளர்கள் மத்தியில் மாத்திரமல்ல, சாதாரண சிங்கள மக்கள் மத்தியிலும் இந்தியா தொடர்பாக ஓர் அச்ச உணர்வு இருந்து கொண்டுதான் இருக்கின்றது. இந்தியா எப்போதும் தமிழர்களுக்கு சார்பான நிலையில் இருக்கும், அதற்கு தமிழகத்தில் வாழும் எட்டுகோடி தமிழர்களுடனான ஈழத்தமிழரின் உறவு காரணமாக அமையும் என்ற அவர்களின் பயமும் நியாயமானதுதான்.

அதனால்தானோ என்னவோ, இந்தியாவும் இப்போது சிங்கள மக்களுடனும் ஊடாட்டத்தில் ஈடுபட முயற்சிக்கின்றது. நாட்டிலுள்ள பௌத்த விகாரைகள் அனைத்திற்கும் சூரிய ஒளியில் மின்சாரம் வழங்க இந்தியா உதவி செய்திருப்பதையும் இந்த பின்னணியில் தான் பார்க்கலாம்.

அப்படியொரு நிலையில் இந்தியா மீண்டும் இலங்கையில் போராட்டத்திற்கு - அதாவது புலிகளின் போராட்டத்துக்கு ஆதரவு வழங்கவிருக்கின்றது என்று ஒரு முக்கிய தமிழ் பிரமுகர் அறிவிப்பது சாதாரண மான விடயமாக கடந்துசெல்லக்கூடியது அல்ல.

**- ஊர்க்குருவி.**

# மாவீரரின் பெற்றோர் மூங்கிலாறில் கௌரவிப்பு



முல்லைத்தீவு, நவ. 27

தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தில் உயிர்நீத்த மாவீரர்களின் பெற்றோர் மூங்கிலாறில் கௌரவிக்கப் பட்டனர்.

மூங்கிலாறு பகுதியில் விசேடமாக ஒழுங்கமைக்கப்பட்ட இடத்தில் மூங்கிலாறு, வள்ளுவர் புரம், தேராவில், இளங்கோபுரம், மாணிக்கபுரம் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர் இவ்வாறு கௌரவிக்கப்பட்டனர்.

மூங்கிலாறு சிவன் ஆலயம் முன்பாக இருந்து மாவீரர்களின் பெற்றோர்கள் மங்கள வாத்திய இசையோடு விழா மண்டபம் வரை அழைத்து வரப்பட்டனர். தொடர்ந்து, பொதுச்சுடர் ஏற்றப்பட்டு திருவுருவப்படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு சுடர் ஏற்றப்பட்டு அகவணக்கம் செலுத்தி மலர் வணக்கம் இடம் பெற்றதை தொடர்ந்து பெற்றோர்களுக்கான மதிப்பளிப்பு நிகழ்வு மிகவும் சிறப்பாக இடம் பெற்றது

நிகழ்வில் சுமார் 200இற்கும் மேற்பட்ட மாவீரர்களின் பெற்றோர் கௌரவிக்கப்பட்டனர். (ஐ)

# மாவீரர்களின் பெற்றோர்கள் வள்ளிபுனத்திலும் கௌரவம்!



முல்லைத்தீவு, நவ. 27

தமிழ் மக்களுக்கான உரிமைப் போருக்காக தங்கள் பிள்ளைகளை உவந்தளித்த மாவீரர்களின் பெற்றோர்களை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் வள்ளி புனத்திலும் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் வள்ளி புனம் தேவிபுரம் பகுதிகளை சேர்ந்த மாவீரர்களின் பெற்றோர் கௌரவிக்கப்பட்டனர்.

சமூக செயல்பாட்டாளர் தம்பையா யோகேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற குறித்த நிகழ்வில் மாவீரர்களுடைய பெற்றோர்கள் வள்ளிபுனம் முருகன் ஆலயம் முன்பாக இருந்து மலர் மாலை அணிவித்து மங்கள வாத்தியங்கள் சகிதம் வர வேற்கப்பட்டனர்.

பொதுச்சுடரை நான்கு மாவீரர்களின் தாயார் ஒருவர் ஏற்றியதைத் தொடர்ந்து அங்கு சுடர்கள் ஏற்றப்பட்டு திருவுருவப்படத்திற்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு மலர் வணக்கம் இடம்பெற்று அகவணக்கம் செலுத்தப்பட்டு பெற்றோர் கௌரவிப்பு நிகழ்வு மிகச் சிறப்பாக இடம் பெற்றது

இதன்போது மாணவர்களின் கலை நிகழ்வுகளும் நடைபெற்றன. (ஐ)

# மாவீரர்களின் நினைவாக முல்லையில் குருதி கொடை



முல்லைத்தீவு, நவ. 27

தமிழ் மக்களுக்கான உரிமைப் போரில் தமது உயிர்களை ஈகை செய்த மாவீரர்களின் நினைவாக நேற்று முள்ளியவளையில் இரத்ததான முகாம் நடைபெற்றது.

அங்குள்ள தனியார் மருத்துவமனை வளாகத்தில் இந்த நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

வன்னிகுரோஸ் அமைப்பு, அபிஷா தனியார் மருத்துவ மனையின் முல்லை கிளை ஆகிய இணைந்து இந்த இரத்ததான முகாமை ஏற்பாடு செய்திருந்தனர். இதில் பலர் பங்கேற்று குருதிக் கொடை வழங்கினர்.

குருதிக் கொடை வழங்கியவர்களுக்கு பாராட்டுப் பத்திரங்களும் மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன. (ஐ-10)

# இரு தேசிய மருத்துவமனைகளினதும் இருதய வடிகுழாய் இயந்திரங்கள் பழுது

கொழும்பு, நவ. 27

கொழும்பு மற்றும் கண்டி தேசிய மருத்துவமனைகளின் இருதய வடிகுழாய் இயந்திரங்கள் செயலிழந்துள்ளன என்று அரசாங்க கதிரியக்க தொழில் நுட்பவியலாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பு தேசிய மருத்துவமனையில உள்ள இருதய வடி குழாய் இயந்திரம் ஒன்று தற் போது அரைகுறையாக செயலபடும் நிலையில் உள்ள தாக சங்கத்தின் தலைவர் ஜனக தர்மவிக்ரம தெரிவித் துள்ளார்.

இதேவேளை, கொழும்பு தேசிய மருத்துவமனையின் இருதய வடிகுழாய் இயந்திரம் அடுத்த வாரம் சீர்செய்யப் படும் என சுகாதார சேவைகள் பணிப் பாளர் நாயகம் மருத்துவர் அசேல குண வர்தன தெரிவித் துள்ளார்.

கண்டி தேசிய மருத்துவ மனையில் உள்ள இருதய வடி குழாய் இயந்திரத்துக்குப் பதி லாக புதிய இயந்திரம் வழங்க வேண்டியுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

ஈழநாடு
Eelanadu
27.11.2023 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், கார்த்திகை 11

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: eelanaduweekly@gmail.com**
**தொலைபேசி : 021 205 2300**

# வரலாற்றிலிருந்து கற்றுக்கொள்ளுதல்

கடந்த 18.11.2023 அன்று, மக்கள் முறைப்பாட்டுக்கான வடக்கு - கிழக்கு சிவில் சமூக குழு அரசியல் கட்சிகளின் ஒற்றுமையை வலியுறுத்தி சந்திப்பு ஒன்றை ஏற்பாடு செய்திருந்தது. தமிழ் மக்களின் அரசியல் எதிர்காலத்தை தீர்மானிக்கக்கூடியவர்கள் என்று கருதப்படும் பிரதான கட்சிகளின் தலைவர்கள் முக்கிய பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் சந்திப்பில் பங்கு கொண்டிருந்தனர்.

நீண்ட இடைவெளிகளுக்கு பின்னர் முக்கிய கட்சிகளின் தலைவர்கள் அனைவரும் ஒரு சந்திப்பில் கலந்து கொண்ட சந்தர்ப்பமாக அந்த நிகழ்வு அமைந்திருந்தது. இந்த நிகழ்வில் பேசிய மூத்த பத்திரிகையாளர் ஒருவர் ஒரு விடயத்தை சுட்டிக்காட்டியிருந்தார். அதாவது, தமிழ் கட்சிகளின் தலைவர்கள் வரலாற்றிலிருந்து எதனையும் கற்றுக்கொள்ளவில்லை - கட்சிகளின் தலைவர்கள் மட்டுமல்ல மக்களும் எதனையும் கற்றுக்கொண்டதாக தெரியவில்லை - என்றார்.

“வரலாற்றிலிருந்து நாம் எதனை கற்றுக்கொண்டிருக்கின்றோம் என்றால், எதனையுமே கற்றுக் கொள்ளவில்லை என்பதுதான்” - இது ஜேர்மனிய அறிஞர் ஹெகலில் பிரபலமான கூற்று. இதேபோன்று அமெரிக்க அறிஞர் ஜோர்ஜ் சந்தயனா, வரலாறு பற்றி இவ்வாறு கூறுவார். “வரலாற்றின் தவறுகளை மறப்போர் அந்தத் தவறுகளை மீளவும் செய்வதற்கு சபிக்கப்பட்டவர்களாவர்”. யுத்தம் முடிவுற்று பதினான்கு வருடங்கள் சென்றுவிட்டது. பதினான்கு வருடம் என்பது சாதாரணமான காலப்பகுதியல்ல. இனியும் தொடர்ந்தும், நாங்கள் இடைமாறுகால சூழலில் இருக்கின்றோம் என்று சொன்னதையே சொல்லிக் கொண்டிருப்பதில் பயனில்லை. யுத்தத்தின் முடிவும் யுத்தத்துக்கு பின்னர் கிடைத்த அனுபவங்களும் நமக்கு போதிய படிப்பினைகளை தந்திருக்கின்றது. ஆனால், அவற்றிலிருந்து நாம் எதனைக் கற்றுக் கொண்டிருக்கின்றோம் என்பதுதான் கேள்விக்குறி.

இலங்கை தமிழரசு கட்சி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து தமிழ் ஆயுத இயக்கங்கள் அரசியலை ஏகபோகமாக தீர்மானித்த காலம் வரைக்கும் ஒரு வரலாற்று அனுபமும் உண்டு. இந்தக் காலமானது இந்தியாவின் ஈடுபாடுகள் மற்றும் அதன் வரையறைகள் தொடர்பில் போதிய அனுபவத்தை தந்திருக்கின்றது. பின்னர் விடுதலைப் புலிகள் ஏகபோகமாக அரசியலை தீர்மானித்த காலத்தில் நாங்கள் விடுதலைக் கனவுகளை சுமந்து கொண்டு, அதற்கு இசையமைத்து மகிழ்ந்து கொண்டிருந்தபோது, மறுபுறம் மேற்குலகமோ விடுதலைப் புலிகள் அமைப்பை சர்வதேச பயங்கரவாத அமைப்பாகப் பிரகடனம் செய்தது. யுத்தம் முடிந்து பதினான்கு வருடங்கள் கழிந்த பின்னரும்கூட, விடுதலைப் புலிகள் இயக்கத்தின் மீதான பயங்கரவாத முத்திரை அகலவில்லை.

தமிழர்கள் பலமாக இருந்தால் இலங்கைத் தீவில் கரிசனை கொண்டிருக்கும் பலம்பொருந்திய சக்திகள் தமிழர்களை நோக்கி வருவார்களென்று இப்போதும் நம்மில் சிலர் கூறிவருகின்றனர். அது உண்மையாயின் ஏன் விடுதலைப் புலிகள் இயக்கத்தை நோக்கி அவ்வாறான சக்திகள் பேரம் பேசலில் ஈடுபடவில்லை. விடுதலைப் புலிகளின் இறுதிக் காலத்தில், முற்றிலும் முரண்பட்ட சர்வதேச சக்திகளான அமெரிக்கா, சீனா, பாகிஸ்தான், ரஷ்யா அனைவருமே இலங்கையை நோக்கி திரும்பியது உண்மை - எதற்காக என்றால் விடுதலை புலிகளை அழிப்பதற்காக. இந்த அடிப்படையில் நோக்கினால் தமிழர் பலமாக இருந்தால் எங்களை நோக்கி மற்றவர்கள் வருவார்கள் என்பதும் பலவீனமான வாதமாகவே தெரிகின்றது.

விடுதலைப் புலிகளுக்கு பின்னரான கடந்த பதினான்கு வருட கால அரசியலும் மாறுபட்ட அனுபவங்களை தந்திருக்கின்றது. ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அழுத்தங்களின் எல்லையை நம்மால் புரிந்து கொள்ள முடிந்திருக்கின்றது. மேற்குலகத்தின் அழுத்தங்களின் தாக்கம் என்ன என்பதையும் நம்மால் அறிய முடிந்திருக்கின்றது. அனைத்தையும் சேர்த்து நோக்கினால் - தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள், நமது அரசியல் சிந்தனையாளர்கள், அனைத்துக்கும் அப்பால் நமது மக்களுக்கு முன்னால் கடந்த காலம் போதிய அனுபவங்களை குவித்து வைத்திருக்கின்றது. ஆனால், கற்றுக் கொள்ளத்தான் நம்மால் முடியவில்லை. எதிர்காலத்தை வரையறுக்க விரும்பினால் கடந்தகாலத்தை படி - என்று ஒரு கூற்றுண்டு. ஆனால், நமது சூழலில் அதற்கு எவரும் முயற்சிப்பதாக தெரியவில்லை. நமது இன்றைய நிலைமைக்கு காரணம் நாம் வரலாற்றிலிருந்து எதனையும் கற்றுக்கொள்ள முயற்சிக்காதமைதான்.

## வடமாகாண மரநடுகை மாதம்

**கார்த்திகை - 2023**



*“மரங்களின் மீது கரிசனை கொண்ட கடவுள் அவற்றை வரட்சி, நோய்கள், பனிச்சரிவுகள், ஆயிரமாயிரம் சூறாவளிகள் மற்றும் கடும் வெள்ளப்பெருக்குகளில் இருந்து காப்பாற்றினாலும் முட்டாள்களிடம் இருந்து மட்டும் அவரால் அவற்றைக் காப்பாற்ற முடியவில்லை.”*

**- ஜோன் மூர் (அமெரிக்க இயற்கையியலாளர்)**

# கொக்குத்தொடுவாய் புதைகுழி; 35 மனித உடல் எச்சங்கள் மீட்பு!

## 3டி பரிசோதனை முடிவு நாளை வெளியாகும் வியாழக்கிழமை பணியை முடிக்க திட்டம்



கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் இதுவரை 35 மனித உடல் எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன. அத்துடன், துப்பாக்கி சன்னங்கள், அவற்றின் சிதறல்கள், இலக்கத் தகடுகள் சயனைட் குப்பி என்பனவும் மீட்கப்பட்டுள்ளன.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியில் நேற்று முன்தினம் 5 மனித எலும்பு எச்சங்கள் மீட்கப்பட்டன. இதன்போது, இரும்பு குண்டுகள் என சந்தேகிக்கப்படும் சில பகுதிகளும் மீட்கப்பட்டன.

இந்தப் புதைகுழியின் இரண்டாம் கட்ட அகழ்வாராய்ச்சியின் போது 17 முழுமையான மனித உடல்கள் தொடர்பான எலும்புகள் மீட்கப்பட்டன. மூன்றாம் கட்டத்தின் ஆறாவது நாளில் மேலும் 4 மனித உடல்கள் தொடர்பான எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டன.





மூன்றாம் கட்ட அகழ்வாராய்ச்சியின் மூலம் இதுவரை 18 மனித உடல்களின் எலும்புக்கூடுகளை கண்டெடுக்க முடிந்தது. இதுவரை 35 முழு மனித உடல்களின் எலும்புக்கூடுகள் புதைகுழிகளில் இருந்து மீட்கப்பட்டுள்ளன.

வெடிமருந்துகள் போன்ற 8 பாகங்கள், விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களின் 6 இலக்கத் தகடுகள், நீர் சுத்திகரிப்பு சாதனம், சயனைட் குப்பி, பெண்களின் உள்ளாடைகளும் கண்டெடுத்ததாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

நிலத்தடி உலோகங்கள், எலும்புகள் மற்றும் ஆயுதங்களை கண்டறிவதற்காக விசாரணைகளை முன்னெடுத்த விசேட குழுவினர் புதைகுழியை சூழவுள்ள பகுதியை ஸ்கான் செய்தனர். 3டி பரிசோதனை முடிவுகள் நாளை செவ்வாய்க்கிழமைக்குள் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பிரதான வீதிக்கு கீழும் உடல்கள் புதைக்கப்பட்டிருக்கலாமென கருதப்படுகிறது. பரிசோதனை முடிவில் அது உறுதியானால், பிரதான வீதியும் தோண்டப்படும். எவ்வாறாயினும் வரும் வியாழக்கிழமைக்குள் புதைகுழி தோண்டும் பணிகள் முழுமையாக முடிவுக்கு வருமென எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவரை காலமும் மனித புதைகுழியில் இருந்து மீட்கப்பட்ட எலும்புக்கூடுகள் முல்லைத்தீவு நீதிவான் உத்தரவின் பேரில் விசாரணைக்காக முல்லைத்தீவு வைத்தியசாலையில் நிறுவப்பட்டுள்ள விசேட அறையில் வைக்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றத்தின் தற்போதைய நீதவான் தர்மலிங்கம் பிரதீபனின் மேற்பார்வையின் கீழ், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு சட்டவைத்திய அதிகாரிகள், தொல்பொருள் திணைக்களத்தின் சிரேஷ்ட பேராசிரியர் ராஜ் சோமதேவ தலைமையிலான குழுவினர் இந்தப் புதைகுழி தொடர்பான அகழ்வுப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**நவம்பர் - 27 திங்கட்கிழமை**
**சோபகிருது வருடம் - கார்த்திகை 11**
**நல்ல நேரம் : 06.00 - 07.30**
**ராகு காலம் : 07.30 - 09.00**
**திதி : பௌர்ணமி**




**மேடம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் எவ்வளவு பணம் வந்தாலும் எடுத்துவைக்க முடியவில்லையே என்று ஆதங்கப்படுவீர்கள். சிலர் உங்களை மட்டம் தட்டிப் பேசினாலும் உணர்ச்சி வசப்படுவார்கள்.

**இடபம்**
குடும்பத்தினரை அனுசரித்துப் போங்கள். வெளி வட்டாரத்தில் யாரையும் விமர்சிக்க வேண்டாம். உறவினர் நண்பர்களுடன் நெருடல்கள் வந்து நீங்கும். அரசாங்க விஷயங்கள் தாமதமாகும்.

**மிதுனம்**
குடும்பத்தில் மனம்விட்டுப் பேசுவது நல்லது. மன திற்கு இதமான செய்தி வரும். உங்களால் வளர்ச்சி அடைந்த சிலரை இப்பொழுது சந்திக்க நேரிடும். உயரதிகாரிகளின் நட்பு கிடைக்கும்.

**கடகம்**
எதையும் சாதிக்கும் தன்னம்பிக்கை பிறக்கும். பழைய உறவினர் நண்பர்களை சந்தித்து மகிழ் வீர்கள். பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். விலகி நின்றவர்கள் விரும்பி வருவார்கள்.

**சிம்மம்**
தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். உறவினர்களால் ஆதாயம் உண்டு. பழைய சிக்கலில் ஒன்று தீரும். வெளியூர் பயணங் களால் மகிழ்ச்சி தங்கும். வியா பாரத்தில் புது தொடர்பு கிடைக்கும்.

**கன்னி**
சந்திராஷ்டமம் இருப்பதால் சில வேலைகளை உங் கள் பார்வையிலேயே முடிப்பது நல்லது. சிலர் உங்களிடம் நயமாகப் பேசினாலும் சொந்த விஷ யங்களை பகிர்ந்துக் கொள்ள வேண்டாம்.

**துலாம்**
சோர்வு நீங்கி துடிப்புடன் செயல்படத் தொடங்குவீர்கள். சகோதர வகையில் ஒற்றுமை பிறக்கும். விலை உயர்ந்த ஆபரணங்கள் வாங்குவீர்கள். வியாபாரத் தில் புது வாடிக்கையாளர்கள் அறிமுகமாவார்கள்.

**விருட்சிகம்**
எதிர்பாராத பணவரவு உண்டு. உறவினர் நண்பர் களால் ஆதாயமடைவீர்கள். சிலர் உங்களை நம்பி பெரிய பொறுப்புகளை ஒப்படைப்பார்கள். வியா பாரத்தில் புது யுக்திகளை கையாளுவீர்கள்.

**தனுசு**
குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். ஆடம்பரச் செலவுகளை குறைத்து சேமிக்கத் தொடங்குவீர் கள். நட்பால் ஆதாயம் உண்டு. அக்கம்-பக்கம் வீட்டாரின் ஆதரவு பெருகும்.

**மகரம்**
நீண்ட நாட்களாக பார்க்க நினைத்த ஒருவரை சந் திப்பீர்கள். தாய்வழி உறவினர்களுடன் மனஸ்தாபம் வந்து நீங்கும். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். புதுவேலை கிடைக்கும்.

**கும்பம்**
குடும்பத்தினரின் எண்ணங்களை கேட்டறிந்து பூர்த்தி செய்வீர்கள். சொத்துப் பிரச்சினைக்கு சுமூக தீர்வு கிடைக்கும். புது வாகனம் வாங்குவீர்கள். சொந்த-பந்தங்கள் தேடி வருவார்கள்.

**மீனம்**
கணவன்-மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். வராது என்றிருந்த பணம் கைக்கு வரும். உறவி னர்கள் மதிப்பார்கள். இழுபறியாக இருந்த வேலை கள் முடியும். நேர்மறை எண்ணம் பிறக்கும்.

# தமிழ்நாட்டில் கோயில் நிலங்கள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளன!

## மீட்க வலியுத்துகிறார் மத்திய அமைச்சர் முருகன்

சென்னை, நவ. 27

தமிழகத்தில் கோயில் நிலங் கள் கொள்ளை அடிக்கப்பட்டி ருக்கின்றன என்று மத்திய இணையமைச்சர் எல். முருகன் கூறியுள்ளார்.

சென்னையில் செய்தியாளர் களை சந்தித்த அவர் மேலும் கூறுகையில்,

தமிழகத்தில் உள்ள கோயில் களுக்குச் சொந்தமான நிலங்கள் கொள்ளை அடிக்கப்பட்டிருக் கின்றன. அதேபோல, கோயில் சிலைகள் திருடப்பட்டுள்ளன. இவ்வாறு திருடப்பட்ட சிலை களை வெளி நாடுகளில் இருந்து மீட்டு தமிழகத்துக்கு கொண்டு வந்தது பிரதமர் மோடிதான்.



பல கோயில்களின் நிலங்கள் காணாமல் போய்விட்டன. 1986ஆம் ஆண்டு அறநிலைய துறையின் கொள்கை விளக்கப் புத்தகத்தில், 5.25 லட்சம் ஏக்கர் அளவில் கோயில்களுக்குச் சொந்தமாக நிலங்கள் உள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், தற்போது 4.78 லட்சம் ஏக்கர் நிலங்கள்தான் இருப்ப தாக கூறுகிறார்கள். மீதமுள்ள நிலத்தை ஆக்கிரமித்துள்ளது யார்?

அதற்கான வாடகை எங்கே? கோயில் நிலத்தை ஆக்கிரமித்த எத்தனை பேர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது? தமிழகத்தில் ஏறத்தாழ 1.35 லட்சம் ஏக்கர் கோயில் நிலத் துக்கு எவ்வித ஆவணமும் அர சிடம் இல்லை. இதுகுறித்து தமிழக அரசு வெள்ளை அறிக்கை வெளியிட வேண் டும். கோயில் நிலங்களை மீட்க முதல்வர் ஸ்டாலின் நடவ டிக்கை எடுக்க வேண்டும் - என் றார். (ஐ)

# இந்திய அரசமைப்பு சட்டம் முழுமைபெறாத ஆவணம்!

## தமிழ்நாடு ஆளுநர் தெரிவிப்பு

சென்னை, நவ. 27

இந்திய அரசமைப்பு சட்டம் முழுமை பெறாத ஆவணமாக உள்ளது என்று சட்டப் பல்க லைக்கழக விழாவில் ஆளுநர் ஆர்.என்.ரவி தெரிவித்துள்ளார்.

நமது அரசமைப்பு சட்டமா னது தீண்டாமையை நீக்குவது டன், அனைத்து தரப்புக்குமான சமத்துவத்தை கொண்டதாக இருக்க வேண்டும். தற்போ தைய காலத்தில் எளிய மக்க ளுக்கு நீதி கிடைப்பது விலை உயர்ந்ததாக உள்ளது. சுதந்திரத் துக்காக போராடும் போது நாம் அனைவரும் ஒற்றுமை யாக இருந்தோம். அதன்பின் அவரவர் தாய்மொழி என்று மாநிலங்கள்அளவில் பிரித்து வைக்கப்பட்டுள்ளோம். மேலும், நம்மிடையே பிரிவி னையை ஏற்படுத்தும் பல்வேறு கருத்துகள் பரவி வருகின்றன.

அதைவிடுத்து நாம் தனித்து வம் வாய்ந்த நாட்டில் வாழ்கி றோம் என்பதை உணர்ந்து, நமது அரசமைப்பு சட்டம் உரு வாக்கப்பட்டதன் நோக்கத்தை நிறைவேற்றும் பணிகளை முன்னெடுக்க வேண்டும். ஒரு நாடு சுதந்திரம் பெற்றபின் அதன் மக்கள் வளர்ச்சியை நோக்கிநகர வேண்டும். ஆனால், இங்கு குறிப்பிட்ட சிலர் மட்டுமே வளர்ச்சி பாதையில் செல்கின்றனர். நமது அரசமைப்பு சட்டம் தனித்துவம் வாய்ந்த பல்வேறு குழுக்கள் மூலம் மிகுந்த அழுத்தங்களுக்கு இடையே உருவாக்கப்பட்டது. அதனால் தான் இன்றளவும் அது முழுமை பெறாத ஆவணமாகவே உள் ளது.

இதேபோல், அரசியலமைப் புச் சட்டம் உருவாக்கப்பட்ட தன் நோக்கம் நிறைவேறி உள் ளதா என்பது குறித்து நாம் விவாதிக்க வேண்டும். நீதிமன் றங்களில் மட்டும் இல்லாமல் சட்டப் பல்கலைக்கழங்களிலும் அரசமைப்பு சட்டம் குறித்து கலந்துரையாடுவது அவசிய மாகும் - என்றார். (ஐ)

## காகித குடுவைகளில் மது:

# மாபெரும் போராட்டத்தை பா. ம. க. முன்னெடுக்கும்!

## அன்புமணி ராமதாஸ் அறிவிப்பு

சென்னை, நவ. 27

“காகித குடுவைகளில் 90 மி. லீ. மது அறிமுகம் செய்யப்பட் டால் மாபெரும் போராட் டத்தை பா. ம. க. முன்னெடுக் கும்” என அந்தக் கட்சியின் தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் இது தொடர்பாக வெளியிட்டிருக்கும் அறிக்கை யில்,

“தமிழகத்தில் மதுவகைகள் கண்ணாடி புட்டிகளில் அடைத்து விற்கப்படுவதற்கு மாற்றாக காகித குடுவைகளில் (Tetra Pack) அடைத்து விற்கப் படவுள்ளதாகவும் அது குறித்த அறிவிப்பு வெகு விரைவில் வெளியாகும் என்றும் மது விலக்கு துறை அமைச்சர் முத்து சாமி தெரிவித்திருக்கிறார்.

மது அருந்துபவர்கள் காலியான மதுப்புட்டிகளை கண்ட இடங்களில் வீசுவதால் சுற்றுச்சூழலுக்கும், விலங்குக ளுக்கும் ஏற்படும் பாதிப்புகளை யும் ஆபத்துகளையும் ஒப்பிடும் போது காகிதக் குடுவைகளில் மது வணிகம் செய்வதால் ஏற் படும் பாதிப்புகள் குறைவு. ஆனாலும், தமிழ்நாட்டில் மது விலக்கை நடைமுறைப்படுத் தும் கோணத்தில் பார்க்கும் போது, இந்த மாற்றம் தமிழகத் தில் மதுக்கடைகள் மூடப்படு வதை தாமதப்படுத்தும். அந்த வகையில் இதை பாட்டாளி மக்கள் கட்சி கடுமையாக எதிர்க்கிறது.

காகிதக் குடுவைகளில் மதுவை வணிகம் செய்ய தமிழக அரசு முடிவு செய்திருப் பது தமிழகத்தில் மது விலக்கு நடைமுறைப்படுத்தப்படுவதை தாமதப்படுத்தும்.

தமிழகத்தில் படிப்படியாக முழு மதுவிலக்கு என்பதுதான்



மக்களின் விருப்பம். அரசின் திட்டமும் அதுவாகத்தான் இருக்க வேண்டும். அதற்கு எதிரான வகையில், 90 மி. லீ. காகிதக் குடுவையில் மதுவை அறிமுகம் செய்து, இளைய தலைமுறையினரிடம் மதுப் பழக்கத்தை அதிகரிக்க தமிழக அரசு முயன்றால் அதை பாட் டாளி மக்கள் கட்சி அனுமதிக் காது. அதைக் கண்டித்து ஒட்டு மொத்த தமிழக மக்களையும் திரட்டி, வரலாறு காணாத அள விலான போராட்டத்தை பாட் டாளி மக்கள் கட்சி முன்னெ டுக்கும் என்று எச்சரிக்கிறேன்” - என்றுள்ளது. (ஐ)

# தொடர்ச்சியான கைது நடவடிக்கையே இந்திய மீனவர்களை கட்டுப்படுத்தும்!

## யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சம்மேளனம்

யாழ்ப்பாணம், நவ. 27

**இலங்கை கடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடும் இந்திய கடற்றொழிலாளர்களை தொடர்ச்சியாக கைது செய்வதன் மூலம் வருகையை கட்டுப்படுத்த முடியும் என்று யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் சமாசங்களின் சம்மேளன தலைவர் புனிதப் பிரகாஷ் தெரிவித்தார்.**

நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் ஊடக அமையத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்திய அத்துமீறிய மீன்பிடியை கட்டுப்படுத்துமாறு பல வருடங்களாக கோரிக்கை முன்வைத்தும் எவ்வித பயனும் எமது மீனவர்களுக்கு கிடைக்கவில்லை.

அண்மையில்கூட யாழ்ப்பாண மாவட்ட செயலகத்துக்கு முன்பாக மீனவர் அமைப்புகள் ஒன்று சேர்ந்து கவனவீர்ப்பு போராட்டத்தை முன்னெடுத்து இரு நாட்டு தலைவர்களுக்கும் கோரிக்கை கடிதத்தையும் கையளித்தோம்.

எமது பிரச்னை தொடர்பில் இரு நாட்டு தலைவர்களிடம் இருந்து சாதகமான பதில் இதுவரை கிடைக்கவில்லை. எமது கடற்பரப்பினுள் எல்லை தாண்டிய இந்திய மீனவர்களை கடற்படை கைது செய்யும் நிலையில் கைதுகள் போதாது என மீனவர்கள் ஆகிய நாங்கள் கருதுகிறோம்.

கைதுகள் குறைக்கப்படுமாயின் மீனவர்களின் அத்துமீறிய வருகை அதிகரிக்கும். இதனால், எமது மீனவர்களின் வாழ்வாதாரம் தொடர்ச்சியாக பாதிக்கப்படும் சூழ்நிலை அதிகரிக்கும்.

ஆகவே, இலங்கை கடற்படை இந்திய அத்துமீறிய மீன்பிடியை கட்டுப்படுத்துவதற்கு தொடர்ச்சியான கைது நடவடிக்கைகளை அதிகரிக்க வேண்டும் - என்றார். (ஐ)



# தையிட்டி விகாரை முன்பாக நேற்றும் முன்னணி போராட்டம்!

யாழ்ப்பாணம், நவ. 27

தையிட்டி பகுதியில் அமைக்கப்பட்ட விகாரைக்கு எதிர்ப்பு தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் நேற்றும் போராட்டத்தை நடத்தினர்.

தையிட்டி விகாரைக்கு எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போராட்டத்தை முன்னெடுத்து வருகின்றது.

இந்நிலையில், பௌர்ணமி தினமான நேற்றும் போராட்டம் நடைபெற்றது. (ஐ)




# இரு வாகனங்களிடையே ஓட்டோ சிக்கி விபத்து!

யாழ்ப்பாணம், நவ. 27

யாழ்ப்பாணம் பண்ணை பகுதியில் நோயாளர் காவு வண்டியுடன் மேலும் இரண்டு வாகனங்கள் விபத்துக்கு உள்ளாகின.

நோயாளர் காவு வண்டியை பின்னால் வந்த முச்சக்கரவண்டி முந்திச் செல்ல முற்பட்டவேளை எதிரே வந்த வாகனத்துடன் மோதி நோயாளர் காவு வண்டிக்கும் எதிரே வந்த வாகனத்துக்கும் இடையில் சிக்கி விபத்துக்குள்ளானது.

எனினும், தெய்வாதீனமாக எவருக்கும் பாரதூரமான காயங்கள் எதுவும் ஏற்படவில்லை.

இந்த சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ)

# சி. ரி., எம். ஆர். ஐ. ஸ்கான் சோதனைகளை உரிய முறையில் முன்னெடுக்க உத்தரவு

கொழும்பு, நவ. 27

அரச மருத்துவமனைகளில் சி.ரி. மற்றும் எம். ஆர். ஐ. ஸ்கான் பரிசோதனைகளை உரிய முறையில் முன்னெடுக்குமாறு சுகாதார அமைச்சர் ரமேஸ் பத்திரண அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மருத்துவ உபகரணங்கள் மற்றும் சேவை வளங்கள் சபையின் பிரதிநிதிகளுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே சுகாதார அமைச்சர் இந்த பணிப்புரையை விடுத்துள்ளார்.

தற்போது அமெரிக்க டொலரின் ஏற்ற இறக்கம் காரணமாக மருத்துவ உபகரணங்களை இறக்குமதி செய்வதில் சிக்கல் நிலை காணப்படுவதால் உரிய முறையில் அவற்றை பயன்படுத்துமாறு அமைச்சர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். (ஐ)

# ஜனாதிபதியுடன் 80 பேர் வெளிநாடு செல்லவுள்ளனர்!

கொழும்பு, நவ. 27

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அரசாங்கத்தின் 80 உயர் வகுப்பினர் அடுத்த வாரம் டுபாய் செல்லவுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி, வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர, சுற்றாடல் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் ஆலோசகர் ருவான் விஜயவர்த்தன உள்ளிட்ட 80 பிரதிநிதிகள் இந்த பயணத்தில் இணைந்து கொள்ளவுள்ளனர் என்று குறிப்பிடப்படுகின்றது.

ஐக்கிய நாடுகளின் காலநிலை தொடர்பான மாநாடு அடுத்த வாரம் டுபாயில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பருத்தித்துறை வாள்வெட்டில் இளைஞர் ஒருவர் படுகாயம்!

வடமராட்சி, நவ. 27

பருத்தித்துறையில் வாள் வெட்டு சம்பவத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

பருத்தித்துறை, கந்தவுடையார் வீதியை சேர்ந்த ஜெயசந்திரன் டிலக்சன் (வயது 23) என்பவரே காயமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

காயமடைந்த இளைஞர் வீதியில் சென்றுகொண்டிருந்த வேளை அவரை மோட்டார் சைக்கிளில் பின்தொடர்ந்த இருவர் அவரை வழிமறித்து வாளால் வெட்டிக் காயப்படுத்தி விட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ஐ-02)

# 400 பொருட்களின் விலைகள் குறையும்



கொழும்பு, நவ. 27

பண்டிகைக் காலத்தில் அத்தியாவசிய பொருட்கள் உள்ளிட்ட 400 பொருட்களின் விலைகளை குறைக்க லங்கா சதொச ஊடாக நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற வளாகத்தில் நேற்று நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் கலந்துக் கொண்ட போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், நாட்டில் நிலவும் சம்பா அரிசி தட்டுப்பாட்டை நிவர்த்திப்பதற்கான வழிமுறைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# நுரைச்சோலை மின் பிறப்பாக்கி நாளை மறுதினம் முதல் இயங்கும்!

கொழும்பு, நவ. 27

பராமரிப்பு பணிகள் காரணமாக செயலிழந்துள்ள நுரைச்சோலை லக்விஜய அனல் மின் நிலையத்தித்தின் மூன்றாவது மின்பிறப்பாக்கி நாளை மறுதினம் முதல் தேசிய மின்கட்டமைப்புடன் இணைத்துக் கொள்ளப்படும் என இலங்கை மின்சார சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், அண்மையில் செயலிழந்த நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் செயல்பாடுகளை முன்னெடுக்க மேலும் 14 நாட்கள் தேவைப்படும் என அந்த சபை தெரிவித்துள்ளது.

இந்த விடயம் குறித்து, எமது செய்திச்சேவை அந்த சபையின் உயர் அதிகாரியை தொடர்பு கொண்டு வினவிய போதே இந்த விடயம் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# எம். பிக்களுக்கு மின்சார இணைப்பு ரூ.160 இலட்சம் இன்னும் நிலுவையில்!

கொழும்பு, நவ. 27

**ஹெஜிங் கொடுக்கல் வாங்கல் காரணமாக கடந்த டிசெம்பர் 31ஆம் திகதி வரை ஆயிரத்து 402 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளது. அத்துடன், பாராளுமன்ற உறுப்பினர்களின் உத்தியோகபூர்வ இல்லங்களுக்கு வழங்கிய மின் இணைப்புக்காக இறுதிக்குள் அறவிடப்பட வேண்டிய கட்டணம் ஒரு கோடியே 60 இலட்சம் ரூபாய் இன்னும் செலுத்தப்படவில்லை என்று தெரியவந்துள்ளது.**

2022ஆம் ஆண்டு தொடர்பான கணக்காய்வாளர் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையின் பிரகாரம், 74 மின் இணைப்புகளுக்கான கொடுப்பனவுகள் செலுத்தப்படவில்லை என்று தெரிய வகின்றது.

இவற்றில் 29 இணைப்புகள் தொடர்பாக 50 இலட்சம் ரூபாய் 6 வருடங்களாக அறவிடப்படவில்லை எனவும் மேலும் 30 இணைப்புகள் தொடர்பான 30 இலட்சம் ரூபாய் ஒரு வருடத்திற்கும் மேலாக அறவிடப்படவில்லை எனவும் தெரியவந்துள்ளது.

இதேவேளை, 2022ஆம் ஆண்டுக்கான பொறியியல் கொடுப்பனவுகள், ஊக்குவிப்புக்கள் மற்றும் தற்காலிக கொடுப்பனவுகள் என்பனவற்றிற்காக முறையான அனுமதியின்றி 41.8 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எரிபொருள் கொள்வனவு தொடர்பில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் மேற்கொண்ட ஹெஜிங் கொடுக்கல் வாங்கல் காரணமாக கடந்த டிசெம்பர் 31ஆம் திகதி வரை ஆயிரத்து 402 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாகவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் 86 இலட்சம் அமெரிக்க டொலர்களை உரிமை கோரி கூட்டுத்தாபனத்துக்கு எதிராக தனியார் வங்கியால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கும் விசாரணையில் உள்ளதாக கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம் சுட்டிக்காட்டியுள்ளது.

# காலி கோட்டையை பார்வையிட கட்டணம் வசூலிக்கப்படாது!

## அமைச்சர் ரமேஷ் பத்திரண உறுதி

கொழும்பு, நவ. 27

காலி கோட்டைக்கு வரும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளிடம் பணம் வசூலிக்க இடமளிக்கப்பட மாட்டாது என அமைச்சர் ரமேஷ் பத்திரண தெரிவித்துள்ளார்.

காலி கோட்டை சுதர்மாலய விகாரையில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலிலேயே அமைச்சர் மேற்கண்ட தகவலை தெரிவித்தார்.

காலி கோட்டையை பார்க்க வரும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளிடம் இருந்து 15 டொலர்களை வசூலிக்க காலி பாரம்பரிய அறக்கட்டளை தீர்மானித்துள்ளதாக பிரதேச வாசிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இந்த தீர்மானத்துக்கு எதிராக சுற்றுலாத்துறையில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்களும் போராட்டங்களை ஏற்பாடு செய்திருந்தனர்.

இதன்படி நேற்று முன்தினம் பிற்பகல் சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண பிரதேசவாசிகளுக்கும் வர்த்தகர்களுக்கும் இடையில் விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தியதுடன் இந்த தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வழங்கப் போவதில்லை என அமைச்சர் தெரிவித்தார்.

# இளைஞர்கள் மத்தியில் எயிட்ஸ் தொற்று உயர்வு

கொழும்பு, நவ. 27

இளைஞர்கள் எயிட்ஸ் தொற்றுக்கு உள்ளாவதில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதாக பாலுறவு நோய் தொடர்பான விசேட மருத்துவ நிபுணர் திலானி ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இதன்படி, 2022இல் எயிட்ஸ் தொற்றினால் பாதிக்கப்பட்ட 607 பேரில் 73 பேர் இளைஞளாவர். இவர்கள் 15 முதல் 24 வயதுக்குட்பட்டவர்கள் என்றும் அவர் கூறினார்.

டிசெம்பர் முதலாம் திகதி உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு கொழும்பு சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர், 2018ஆம் ஆண்டு முதல் 15 முதல் 24 வயது வரையிலான இளைஞர் சமூகத்தில் எயிட்ஸ் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு காணப்படுகிறது.

2022ஆம் ஆண்டில் புதிய எயிட்ஸ் தொற்றினால் பாதிக்கப்பட்டவர்களில் 73 பேர் இளைஞர்கள். அதாவது 12 வீதம். அவர்களில் 66 பேர் ஆண்கள். எனவே, இளைஞர்களிடையே எயிட்ஸ் தடுப்பு மிகவும் முக்கியமானது.

நம்பகமான துணையுடன் உடலுறவு கொள்ளுங்கள். பிற தொடர்புகள் இருந்தால் பாதுகாப்பு நடவடிக்கையாக ஆணுறையைப் பயன்படுத்துவது முக்கியம். எங்கள் நாடு முழுவதும் ஏற்கனவே 41 கிளினிக்குகள் இலவச ஆணுறைகளை வழங்குகின்றன.” என அவர் தெரிவித்துள்ளார். (ஐ)

# கஞ்சா கடத்திய இருவர் கைது!

கொழும்பு, நவ. 27

வான் ஒன்றில் 6 கிலோ கஞ்சாவை கொண்டு சென்ற இரண்டு பேரை வென்னப்புவ பொலிஸார் சனிக்கிழமை கைதுசெய்துள்ளனர்.

புத்தளம் - மாரவில பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முதுகடுவ பிரதேசத்தில் வைத்து இருவரும் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைதானவர்கள் 42 மற்றும் 27 வயதுடையவர்கள் என்பதுடன் அவர்கள் இருவரையும் மாரவில நீதிவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# எதிர்க்கட்சி தலைவர் மீது நடவடிக்கை அவசியமானது

## ஆளும் தரப்பு சபாநாயகரிடம் வலியுறுத்து



கொழும்பு, நவ. 27

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவின் பாராளுமன்ற உரை தொடர்பில் கடும் விமர்சனம் காணப்படுகிறது. வெறுக்கத்தக்க சொற்களை பயன்படுத்தி எதிர்த்தரப்பினரை சாடுகிறார். ஆகவே, இவ்விடயம் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்குமாறு சபாநாயகரிடமும், சபை முதல்வரிடமும் வலியுறுத்தியுள்ளோம் என ஆளும் தரப்பின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு,

கட்சி என்ற ரீதியில் பலமாக செயற்படுகிறோம். அடுத்த மாதம் இடம்பெறவுள்ள கட்சியின் தேசிய மாநாட்டில் அரசியல் ரீதியில் முக்கிய தீர்மானங்களை அறிவிப்போம். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் கொள்கை ரீதியில் எவ்வித தீர்மானங்களும் எடுக்கப்படவில்லை.

ஜனாதிபதி தேர்தலுக்கான அறிவிப்பு வெளியானதும் எமது வேட்பாளரை நாங்கள் அறிவிப்போம். ஜனாதிபதியின் தீர்மானங்கள் நூற்றுக்கு நூறு வீதம் சிறந்தது என்று குறிப்பிட முடியாது. நாட்டில் மீண்டும் அரசியல் நெருக்கடி தோற்றம் பெறக்கூடாது என்பதற்காக ஒன்றிணைந்து செயற்படுகிறோம். தேர்தல் அறிவிக்கப்பட்டவுடன் நாட்டு மக்கள் அரசியல் ரீதியில் தீர்மானம் எடுக்கலாம்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவின் பாராளுமன்ற உரை தொடர்பில் கடும் விமர்சனங்கள் காணப்படுகின்றன. சபைக்கு பொருந்தாத, வெறுக்கத்தக்க சொற்களை பயன்படுத்தி ஆளும் தரப்பின் உறுப்பினர்களை சாடுகிறார், ஆத்திரமூட்டும் வகையில் கருத்துக்களை குறிப்பிடுகிறார். கடந்த செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் இடம்பெற்ற சம்பவத்துக்கு எதிர்க்கட்சித் தலைவரே பொறுப்புக்கூறவேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவரின் கருத்துக்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுங்கள் அல்லது எதிர்க்கட்சித் தலைவரின் பாராளுமன்ற உரையை நேரலையாக ஒளிபரப்புவதை தாமதப்படுத்துமாறு சபாநாயகரிடமும் சபை முதல்வரிடமும் வலியுறுத்தியுள்ளோம் - என்றார். (ஐ)

# போதனா மருத்துவமனையாக தரம் உயரும் பதுளை ஆஸ்பத்திரி

கொழும்பு, நவ. 27

பதுளை பொது மருத்துவமனை போதனா மருத்துவமனையாக தரம் உயர்த்தப்பட்டுள்ளது என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

அத்தோடு, சுமார் 226 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் பேராசிரியர் பிரிவின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

# மலையக மக்களின் காணி உரிமைக்காக முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம்!

## தமிழ் முற்போக்கு கூட்டணி அறிவிப்பு

கொழும்பு, நவ. 27

பெருந்தோட்ட மக்களுக்கு 10 பேர்ச் காணி உரிமையை பெற்றுக்கொடுக்க எமது பூரண ஒத்துழைப்பை வழங்க தயார். அதேபோன்று தோட்ட மக்களின் ஆயிரம் ரூபாவை கம்பனிகாரர்களிடமிருந்து பெற்றுக்கொடுக்க நாங்கள் அனைவரும் போராட முன்வர வேண்டும் என எதிர்க்கட்சி உறுப்பினர் ப. திகாம்பரம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சனிக்கிழமை நடைபெற்ற விவாதத்தில் பங்கேற்றபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மலையக மக்கள் இந்த நாட்டுக்கு வந்து 200 வருடங்கள் கடந்தும் அந்த மக்களின் உரிமைகளை யாராலும் பெற்றுக்கொடுக்க முடியவில்லை. அதனை அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும். நல்லாட்சி அரசாங்கத்தில் அதற்கான வேலைத்திட்டத்தை ஆரம்பித்தோம். 7 பேர்ச் காணி உரிமையை வழங்கினோம். அதிகார சபையை ஏற்படுத்தினோம். பிரதேச சபைகளை அதிகரித்தோம், இவ்வாறான பல வேலைத்திட்டங்களை மேற்கொண்டோம். யார் நெல்லு குத்தினாலும் அரிசியாக வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. அதற்காக விமர்சன அரசியலை நாங்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

மலையக மக்களின் வீட்டுத் திட்டத்தில் அவர்களுக்கு மூல காணிப் பத்திரத்தை பெற்றுக் கொடுத்தோம். இந்த பத்திரத்தை பயன்படுத்திக்கொண்டு மக்களுக்கு வங்கி கடன் பெற்றுக்கொள்ளலாம். இந்த உறுதிப்பத்திரத்தையே நீங்களும் வழங்கப்போகிறீர்கள். ஆனால், மகிந்தானந்த அளுத்கமகே அமைச்சராக இருந்து வழங்கியது வெறும் அனுமதி பத்திரமாகும்.

அத்துடன் மலையக மக்களுக்கான காணி உரிமையை பெற்றுக்கொடுக்க நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். எமது மக்கள் இந்த நாட்டுக்காக உழைத்தவர்கள். ஆனால், இந்த நாடு எமது மக்களுக்காக ஒன்றும் செய்யவில்லை. வரவு - செலவு திட்டங்களில் பெருந்தோட்ட மக்களுக்கு நிதி ஒதுக்கப்படுகிறது. ஆனால், அந்த பணம் முழுமையாக திறைசேரியிடமிருந்து பெற்றுக்குவதில்லை. இந்த விடயத்தில் அமைச்சர் கவனமாக இருக்க வேண்டும். முடிந்தளவு திறைசேரியிடமிருந்து பெற்றுக்கொள்ள முயற்சிக்க வேண்டும். நீங்கள் ஒதுக்கப்பட்ட நிதியை முழுமையாக செலவழித்தால் தான் அடுத்த முறையும் ஒதுக்கப்படும் நிதியை பெற்றுக்கொள்ள முடியும். இல்லாவிட்டால் குறைவாகவே ஒதுக்குவார்கள்.

மேலும், எமது மக்களுக்கான காணியை பிரித்துக் கொடுப்பதற்கு நாங்கள் அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும். அரசாங்கம் ஒரு போதும் காணியை பிரித்துக் கொடுக்கப் போவதில்லை - என்றார். (ஐ)

# புதிய பொலிஸ் மா அதிபர் இந்த வாரம் நியமிக்கப்படுவார்!

கொழும்பு, நவ. 27

**புதிய பொலிஸ் மா அதிபரை நியமிப்பது தொடர்பில் இந்த வாரம் அறிவிக்கப்படும் என அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன.**

**அத்துடன், இது தொடர்பிலான தீர்மானமிக்க கலந்துரையாடல் ஒன்று இன்று திங்கட்கிழமை இடம்பெறவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

அண்மையில், பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர்பில் அதிகாரிகளுடன் உயர்மட்ட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றிருந்தது.

எனினும் அது தொடர்பில், இறுதி தீர்மானம் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

பொலிஸ் மா அதிபர் சி. டி. விக்ரமரத்ன கடந்த வெள்ளிக்கிழமை ஓய்வுபெற்றார். தமது ஓய்வு தொடர்பில் அவர் சகல சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்களுக்கும் பிரதி பொலிஸ் மா அதிபர்களுக்கும் அறிவிக்கப்பட்டிருந்தது.

முன்னாள் பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன கடந்த மார்ச் மாதம் 25 ஆம் திகதி பொலிஸ் மா அதிபர் பதவியில் இருந்து ஓய்வு பெறவிருந்தார். எனினும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவருக்கு நான்கு முறைகள் சேவை நீடிப்பை வழங்கியிருந்தார்.

இதேவேளை, புதிய பொலிஸ் மா அதிபர் நியமனம் தொடர்பான நியமன பத்திரத்தை இந்த வாரம் அரசமைப்பு பேரவைக்கு ஜனாதிபதி அனுப்பவுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்தநிலையில், அரசமைப்பு பேரவை கூட்டத்துக்கான திகதி இதுவரையில் தீர்மானிக்கப்படவில்லை. குறித்த திகதி தொடர்பான அறிவிப்பு இன்றைய தினம் அறிவிக்கப்படும் என பாராளுமன்ற செயலாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

(ஐ)

# கிராமசேவகர் பதவி வெற்றிடம் பெப்ரவரிக்குள் நிரப்பப்படும்!

## இராஜாங்க அமைச்சர் அறிவிப்பு



கொழும்பு, நவ. 27

எதிர்வரும் பெப்ரவரி 4 ஆம் திகதிக்கு முன்னர் அனைத்து கிராம சேவகர் பதவி வெற்றிடங்களும் பூர்த்தி செய்யப்படும் என்று உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்துள்ளார்.

வென்னப்புவ பிரதேசத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்ட போது அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி 2021ஆம் ஆண்டு விண்ணப்பங்களை அனுப்பிய தகுதியான பரீட்சாத்திகளுக்காக கிராம அலுவலர் பரீட்சையை எதிர்வரும் டிசெம்பர் 02ஆம் திகதி பரீட்சைகள் திணைக்களம் நடத்தவுள்ளது.

இந்தப் பரீட்சை ஊடாக 2,238 கிராம சேவகர்கள் உள்வாங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பண்டிகை கால தேவைக்காக அரிசி இறக்குமதிக்கு அனுமதி!

## அமைச்சர் நளின் அறிவிப்பு

கொழும்பு, நவ. 27

வரவுள்ள பண்டிகை காலத்துக்கு தேவையான அரிசியை வழங்க அதனை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

ஆலை உரிமையாளர்கள் அரிசியை சந்தைக்கு விடாமல் மறைத்து வைத்திருப்பதால் தற்போது சந்தையில் கீரி சம்பா, சம்பா அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதன்படி பண்டிகைக் காலங்களில் அரிசி தட்டுப்பாட்டைத் தவிர்க்கும் வகையில் அரிசியை இறக்குமதி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வர்த்தக, வர்த்தக மற்றும் உணவுப் பாதுகாப்பு அலுவல்கள் அமைச்சு ஆலோசனைக் குழுக் கூட்டத்தில் அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

(ஐ)

# 23 கண்காணிப்பு கமெராக்களை சிறையில் சேதப்படுத்திய கைதி குறித்து விசாரணை!

கொழும்பு, நவ. 27

பூஸா சிறைச்சாலையில் கைதி ஒருவரால் 23 சி. சி. ரீ. வி. கமெராக்கள் உடைக்கப்பட்டமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

அண்மையில், அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலையிலிருந்து பூஸா சிறைச்சாலைக்கு மாற்றப்பட்ட கைதி ஒருவர் உடற்பயிற்சிக்காக வெளியே அழைத்துச் செல்ல கதவுகள் திறக்கப்பட்ட போது சிறைச்சாலையின் சுவரில் ஏறியுள்ளார். அதபோது, அங்கு பொருத்தப்பட்டிருந்த 23 பாதுகாப்பு கமெராக்களை அவர் உடைத்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

இதன் பின்னரே, சிறைச்சாலை அதிகாரிகள் தலையிட்டு, கைதியின் செயல்பாடுகளை கட்டுக்குள் கொண்டு வந்தனர் என்று தெரியவருகிறது. பின்னர் சிறைச்சாலை அத்தியட்சகரின் விசாரணையின் பின்னர் இரண்டு சிறைச்சாலை அதிகாரிகளும் சிறை கண்காணிப்பாளர் ஒருவரும் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டனர்.

இந்தநிலையில், குறித்த கைதியை கட்டுப்படுத்த முடியாமல் போனமையே இதற்கு பிரதான காரணமாகும் என சிறைச்சாலைகள் ஆணையாளர் துஷார உபுல்தெனிய தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், சம்பவம் தொடர்பில் மேலும் இரண்டு சிறைச்சாலை அதிகாரிகள் 2 பேருக்கு பணி இடைநிறுத்த கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று சிறைச்சாலைகள் ஆணையாளர் துஷார உபுல்தெனிய மேலும் குறிப்பிட்டார்.

(ஐ)

# கட்டுநாயக்கா விமான நிலையத்தில் கணனி வலையமைப்பு செயலிழப்பு!

## காத்திருப்பால் கோபமடைந்த பயணிகள்

கொழும்பு, நவ. 27

கட்டுநாயக்கா விமான நிலையத்தின் குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் கணனி வலையமைப்பு நேற்று மதியம் செயலிழந்தது. இதனால், வெளிநாடுகளுக்குச் செல்ல வந்த ஆயிரக்கணக்கான பயணிகள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டதுடன் நீண்டநேரம் காக்க வைக்கப்பட்டனர். இதனால், அவர்கள் கோபமடைந்தனர் என்று தெரியவருகின்றது.

குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் கணனி வலையமைப்பு பல தனியார் நிறுவனங்களால் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. சரியான பராமரிப்பு இல்லாததால், இது ஒரு மாதத்தில் பல முறை இதுபோன்று செயலிழந்து வருகிறது என்று அந்தத் திணைக்களத்தின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

இந்த கணனி வலையமைப்பு சர்வதேச இன்டர்போல் பொலிஸுடன் ஒருங்கிணைக்கப்பட்டுள்ளது. இதன் வேகம் குறைவதால் கட்டுநாயக்கா விமான நிலைய குடிவரவு திணைக்களத்தின் கணனி அமைப்பு பலவீனமடையும் என்று பேச்சாளர் கூறினார்.

எனினும், நேற்றைய தினமே கணனி வலையமைப்பு செயல்பாட்டுக்கு வந்தது என்றும் பேச்சாளர் தெரிவித்தார்.

(ஐ)

# வெள்ளை சீனிக்கு சாயம் கலந்து அதிகூடிய விலைக்கு விற்பனை!

## சிறு கைத்தொழில் சங்கம் சாடல்

கொழும்பு, நவ. 27

சில வர்த்தகர்கள் வெள்ளை சீனிக்கு சாயம் கலந்து சிவப்பு சீனியாக ஏமாற்றி அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகின்றது என்று அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது.

சமகாலத்தில் சந்தையில் நிலவும் சீனி தட்டுப்பாட்டை பயன்படுத்தி இவ்வாறான மோசடிகள் இடம்பெறுகின்றன என்று அகில இலங்கை சிறு கைத்தொழில் சங்கத்தின் தலைவர் நிருக்ஷ குமார தெரிவித்துள்ளார்.

217 ரூபாய்க்கு கொண்டு வரப்படும் வெள்ளை சீனிக்கு சாயம் பூசி 350 முதல் 370 ரூபாய் வரையான விலையில் விற்பனை செய்யப்படுகிறது. இதன்மூலம், ஒரு கிலோ சீனிக்கு 150 ரூபாய் இலாபம் ஈட்டப்படுகின்றது.

வெளிச்சந்தையில் 260 ரூபாயில் இருந்த வெள்ளை சீனியின் விலை 310 ரூபாயாகவும் பொதி செய்யப்படாத 290 ரூபாயில் இருந்த சிவப்பு சீனி 350 ரூபாவாகவும் உயர்ந்துள்ளது.

தற்போது வெள்ளை சீனிக்கு 275 ரூபாயும் சிவப்பு சீனிக்கு 330 ரூபாயும் கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பொதி செய்யப்பட்ட வெள்ளை சீனியின் கட்டுப்பாட்டு விலை 295 ரூபாயாகவும், பொதி செய்யப்பட்ட சிவப்பு சீனியின் விலை 350 ரூபாயாகவும் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# எதிர்க்கட்சிகள் ஒத்துழைத்திருந்தால் நாட்டை முன்னரே மீட்டிருக்க முடியும்

கொழும்பு, நவ. 27

எதிர்க்கட்சிகள் ஒத்துழைப்பு வழங்கியிருந்தால் நாட்டை இன்னும் குறுகிய காலத்திலேயே நெருக்கடியிலிருந்து என்னால் மீட்டிருக்க முடியுமென ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மாத்தளை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்று முன்தினம் நடந்த சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நமக்காக அன்றி எதிர்கால சந்ததியினருக்காகவே நாடு கட்டியெழுப்பப்படுகிறது. தம்மை பற்றி மாத்திரமே சிந்திக்கும் எதிர்க்கட்சிகள் அரசாங்கத்துடன் இணைந்து செயல்படுவதே சிறந்த வழியாகும். அரசாங்கத்துடன் இணைந்து செயல்படுவதன் ஊடாக பெற்றுக் கொள்ளும் அனுபவத்தின் அடிப்படையில் எதிர்க்கட்சிகள் அடுத்த தேர்தல் மூலம் ஆட்சி அதிகாரத்தை பெற முயற்சிக்கலாம் எனவும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

அத்துடன், கடந்த பொருளாதார சவாலுக்கு முகங்கொடுத்து எவரும் நாட்டை பொறுப்பேற்க முன்வரவில்லை எனவும், ஆளும் கட்சியின் வேண்டுகோளுக்கு இணங்க தான் சவாலை ஏற்றுக் கொண்டார் என்றும் அவர் தெரிவித்துள்ளார். அனைத்து அரசியல் கட்சிகளும் தமக்கு வழங்கிய ஆதரவை நன்றியுடன் நினைவு கூருவதாகவும் ஜனாதிபதி இதன்போது தெரிவித்தார்.

(ஐ)

# நான்கு மாகாணங்களில் டெங்கு பரவல் அதிகரிக்கும்

கொழும்பு, நவ. 27

மேல், தெற்கு, மத்திய மற்றும் சப்ரகமுவ மாகாணங்களில் அதிக நுளம்புகள் பெருகும் இடங்கள் பதிவாகியுள்ளன என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த வருடத்தில் இதுவரை 74 ஆயிரம் டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என்று அதன் பணிப்பாளர் மருத்துவர் நளின் ஆரியரத்ன தெரிவித்துள்ளார்.

டெங்கு காய்ச்சல் தடுப்புக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் வேலைத்திட்டம் குறித்தும் விளக்கியுள்ளார்.

(அ)

**கல்முனை வடக்கு விவகாரம்:**

# தமிழரசு கட்சியின் மனுவை விசாரணைக்கு ஏற்றது நீதிமன்று

கொழும்பு, நவ. 27

**தமிழர்கள் அதிகமாக வசிக்கும் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தின் தனித்துவத்தை உறுதிப்படுத்தி அறிவிக்கும்படி கோரி தாக்கல் செய்யப்பட்ட வழக்கை விசாரணைக்கு ஏற்பது என மேன்முறையீட்டு நீதிமன்றம் முடிவு செய்துள்ளது.**

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தலைமை நீதியரசர் பந்துல கருணாரட்ன, நீதியரசர் சமத் மொறாயஸ் ஆகியோரை கொண்ட ஆயம் இந்த முடிவை அறிவித்தது.

அமைச்சரவைத் தீர்மானம் மற்றும் ஜனாதிபதியின் அனுமதி ஆகியவற்றுடன் 1989 முதல் கடந்த 34 வருடங்களாக கல்முனை வடக்குப் பிரதேச செயலகம் இயங்கி வருகின்றது. அதன் தனித்துவத்தைப் பறிக்கும் விதத்தில் முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளை சட்டவிரோதமானவை என அறிவிக்கவும், அது தனியான பிரதேச செயலக அந்தஸ்து மற்றும் கட்டமைப்புடையது என்று உறுதிப்படுத்தவும் உரிய உத்தரவை வழங்குமாறு கோரி இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் த. கலையரசன் கடந்த ஜனவரியில் இந்த மனுவை தாக்கல் செய்தார்.

இந்த மனுவை விசாரணைக்கு ஏற்பதா என்ற விடயம் குறித்து கடந்த ஏப்ரல் மாதத்தில் நீதிமன்றம் விரிவாக ஆராய்ந்து முடிவெடுக்க இருக்கையில், கடைசி நேரத்தில் அம்பாறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸும் இன்னும் ஒருவரும் இந்த வழக்கில் தங்களையும் இடையீட்டு மனுதாரர்களாகச் சேர்க்கும்படி கோரி விண்ணப்பித்தனர்.

அதன் அடிப்படையில் திரும்பவும் விசாரணைகள் நடைபெற்றன. மனுவை விசாரணைக்கு ஏற்பது என முடிவு செய்த மேன்முறையீட்டு நீதிமன்றம் அதன் அடிப்படையில் எதிர் மனுதாரர்களான பிரதமரும் உள்நாட்டு அலுவல்கள் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தன, கல்முனை பிரதேச செயலாளர், அம்பாறை மாவட்ட அரச அதிபர் உள்ளிட்ட எதிர் மனுதாரர்களுக்கு அழைப்பாணை வழங்க உத்தரவிட்டு வழக்கை எதிர்வரும் ஜனவரி 17ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர்.

மனுதாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரனும், இடையீட்டு மனுதாரர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி பைசல் முஸ்தபா, சட்டத்தரணி சஞ்சீவ ஜெயவர்தன ஆகியோரும், அரசு தரப்பில் பிரதி சொலிஸிட்டர் ஜெனரல் மனோகர ஜயசிங்கவும் முன்னிலையாகினர். (ஐ)

*மாவீரர் பெற்றோர் கௌரவிப்பு;*

# ஜனநாயக போராளிகளின் உபதலைவருக்கு மறியல்!

மட்டக்களப்பு, நவ. 27

மட்டக்களப்பு வெல்லாவெளியில் உள்ள ஜனநாயகப் போராளிகள் கட்சி பணிமனையில் வைத்து கைது செய்யப்பட்ட கட்சியின் உப தலைவர் சங்கரப்பிள்ளை நகுலேஸை 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்ற நீதவான் நேற்று முன்தினம் சனிக்கிழமை உத்தரவிட்டார்.

வெல்லாவெளியில் அமைந்துள்ள ஜனநாயக போராளிகள் கட்சி மட்டக்களப்பு - அம்பாறை தலைமைக் பணிமனையில் மாவீரர்களின் பெற்றோரை கௌரவிக்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு - அங்கு மாவீரர்களின் பெற்றோர்கள் ஒன்று கூடியிருந்தனர்.

இந்நிலையில், வெல்லாவெளி பொலிஸார் குறித்த பணிமனைக்கு சென்று மாவீரர்களை கௌரவிக்கும் நிகழ்வு சட்டவிரோதமானது என தெரிவித்ததுடன், நிகழ்வை நிறுத்துமாறு கூறியுள்ளனர்.

தொடர்ந்தும், நீதிமன்ற தடை உத்தரவை மீறி சட்டவிரோத ஒன்றுகூடல் செயல்பாட்டில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் கட்சியின் உபதலைவர் ச. நகுலேஸை பொலிஸார் கைது செய்தனர்.

கைதான நகுலேஸ் களுவாஞ்சிக்குடி சுற்றுலா நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் பொலிஸார் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 8ஆம் திகதி வரையான 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (ஐ)

# 40 நாட்கள் கடந்தும் உரமானியம் இன்னமும் கிடைக்கவில்லை!

**மட்டக்களப்பு விவசாயிகள் குற்றச்சாட்டு**

மட்டக்களப்பு, நவ. 27

பெரும்போக விவசாய நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டு 40 நாட்கள் கடந்தும் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்ற உர மானியம் இதுவரையில் தங்களுக்கு கிடைக்கவில்லை என மட்டக்களப்பு மாவட்ட விவசாயிகள் குற்றம் சுமத்துகின்றனர்.

உரத்தை கொள்வனவு செய்வதற்காக விவசாயிகளின் வங்கிக் கணக்குகளுக்கு வைப்பிலிடப்படுவதற்காக 100 கோடி ரூபாய் விடுவிக்கப்பட்டுள்ளதாக விவசாய அபிவிருத்தி திணைக்களம் அண்மையில் தெரிவித்தது.

இதில், மட்டக்களப்பு மாவட்டத்துக்கே அதிகளவான நிதி விடுவிக்கப்பட்டது. 30. 6 கோடி ரூபாய் மட்டக்களப்பு மாவட்டத்திற்கு வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இந்நிலையில், மட்டக்களப்பின் பல பகுதிகளில் விவசாயிகளுக்கு இந்தத் தொகை இன்னும் கிடைக்கவில்லை.

விவசாயிகளுக்கு வழங்குவதாக தெரிவித்த உர மானிய தொகை தங்களுக்கு இதுவரை கிடைக்கப்பெறவில்லை என மட்டக்களப்பு - பண்டாரியாவெளி விவசாயிகள் குறிப்பிட்டனர்.

இது தொடர்பில் மட்டக்களப்பு மாவட்ட கமநல சேவைகள் பிரதி பணிப்பாளர் கே. ஜெகநாத்திடம் வினவிய போது, மட்டக்களப்பு மாவட்டத்தில் 25 வீதமானவர்களுக்கு நிதி வழங்கப்பட்டுள்ளதுடன், மேலும் 25 வீதமானவர்களுக்கு எதிர்வரும் வாரத்தில் அதனை வழங்க நடவடிக்கை எடுப்பதாக அவர் குறிப்பிட்டார்.

மேலும், விவசாயிகள் தங்களின் தகவல்களை முறையாக வழங்காமையினாலே நிதி வழங்குவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட கமநல சேவைகள் பிரதி பணிப்பாளர் தெரிவித்தார். (அ)

# மட்டு. மாவட்ட அபிவிருத்தி குழுவின் இணைத்தலைவராக வியாழேந்திரன்!

மட்டக்களப்பு, நவ. 27

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத் தலைவராக இராஜாங்க அமைச்சர் ச. வியாழேந்திரன் ஜனாதிபதியால் நேற்று முன்தினம் சனிக்கிழமை நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே ஏறாவூர்பற்று, மண்முனை வடக்கு, மண்முனை தென் மேற்கு, போரதீவுப்பற்று, கோறளைப்பற்று தெற்கு பிரதேச அபிவிருத்திக் குழு தலைவராக பதவி வகிக்கும் நிலையில் மாவட்டம் முழுவதுக்குமான அபிவிருத்தி குழு இணைத் தலைவராக வியாழேந்திரனுக்கு இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# அம்பாறை மருத்துவமனையின் கண் மருத்துவர் சடலமாக மீட்பு

அம்பாறை, நவ. 27

அம்பாறை பொது மருத்துவமனையின் கண் பிரிவில் பணியாற்றும் மருத்துவர் ஒருவர் அவர் தங்கியிருந்த தனியார் விடுதியில் சடலமாக மீட்கப்பட்டார்.

அம்பாறை பொலிஸ் நிலையத்தின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் இதனை தெரிவித்துள்ளார்.

குறித்த மருத்துவர், அவர் பணிபுரியும் மருத்துவமனைக்கு செல்லாததால், மருத்துவமனை நிர்வாகம் அவரின் தொலைபேசிக்கு பலமுறை அழைத்தனர். அவரிடமிருந்து எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. இதனையடுத்து மருத்துவமனையை சேர்ந்த இரு தாதிகள் மருத்துவர் தங்கியிருந்த விடுதிக்குச் சென்றுள்ளனர்.

அந்த சமயம், மருத்துவர் படுக்கையில் அசைவற்று இருப்பதைக்கண்டனர். இதைத் தொடர்ந்து மருத்துவமனை நிர்வாகத்துக்கு அறிவித்தனர். அவரை பரிசோதித்தபோது அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டார் என்று தெரியவந்தது.

இந்த சம்பவம் தொடர்பில் அம்பாறை பொலிஸார் விசாரணைகளை நடத்தினர். (ஐ)

# காட்டு யானை தாக்கியதில் குடும்பஸ்தர் உயிரிழப்பு!

மட்டக்களப்பு, நவ. 27

காட்டு யானை தாக்கியதில் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்தார். மற்றொருவர் காயமடைந்த நிலையில் கரடியனாறு பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு - கரடியனாறு - வெள்ளைக்கல்மலை பகுதியில் நேற்று முன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில், வேப்பவெட்டுவான் வீதியை சேர்ந்த 2 பிள்ளைகளின் தந்தையான 41 வயதுடைய கந்தையா கீர்த்திகுமார் என்பவரே உயிரிழந்தார்.

மாடு மேய்க்க சென்று மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பும் வேளையில் காட்டு யானை தாக்கியதாகக் கூறப்படுகின்றது.

சம்பவம் தொடர்பில் கரடியனாறு பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# கல்முனை மருத்துவமனைக்கு தொடராக மின்சாரம் வழங்குக

**கலையரசன் எம். பி. கோரிக்கை**

கொழும்பு, நவ. 27

கல்முனை ஆதார மருத்துவமனைக்கு மின்சாரம் கிடைக்கப்பெறாததால் நோயாளிகள் பெரும் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்று தமிழரசு கட்சியின் த. கலையரசன் எம். பி. தெரிவித்தார்.

நேற்று முன்தினம் பாராளுமன்றில் உரையாற்றியபோதே அவர் இந்த விடயத்தைத் தெரிவித்தார்.


கிழக்கு மாகாணத்தில் பிரபல மருத்துவமனைகள் உள்ளன. அங்கே நோயாளிகள் சிகிச்சை பெற்று வருகின்றனர். ஆனால், 24 மணித்தியால மின்சார சேவை மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டிருந்தாலும் கல்முனை ஆதார மருத்துவமனைக்கு அவ்வாறான சந்தர்ப்பம் இல்லை. மின்சார தடை அங்கு ஏற்படும்



சந்தர்ப்பங்களில் பல தடவை மின்சார சபைக்கு முறையீடு செய்திருந்த போதிலும் அதற்கு தீர்வு வழங்கப்படவில்லை. ஏனைய மருத்துவமனைகளுக்கு 24 மணி நேர மின்சார சேவை வழங்கப்பட்ட போதிலும் கல்முனை ஆதார மருத்துவமனைக்கு வழங்கப்படவில்லை.

இவ்விடயம் தொடர்பாக மக்கள் ஆதங்கப்படுகின்றனர். எனவே, இப்பிரச்னையை தீர்க்க ஆவன செய்ய வேண்டும். அத்துடன், இந்நாட்டில் பல இடங்களில் சேவைகள் விஸ்தரிக்கப்பட்டுக் கொண்டு இருக்கின்றன. நாவிதன்வெளி பிரதேசத்திலும் இவ்வாறான பிரச்னையால் காணப்படுகின்றன. அதனையும் தீர்த்து வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இன்னும் பல இடங்களில் எங்களுடைய மக்கள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். அவ்வாறான மக்களுக்கு அடிப்படை வசதிகளை செய்து தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். எங்களுடைய பிரதேசம் யுத்தத்தால் பாதிக்கப்பட்டு அண்மையில் மீள்குடியேற்றம் செய்யப்பட்டு இருக்கிறது. இந்த இடங்களில் அடிப்படை வசதிகளை செய்து தருமாறு கோரிக்கை விடுக்கின்றேன் - என்றார். (ஐ)



## சூரியனின் சுற்றுப் பாதையை ஜனவரியில் 'ஆதித்யா' அடையும்

சென்னை, நவ. 27

ஆதித்யா விண்கலம் சூரியனின் எல் - 1 சுற்றுப்பாதைப் பகுதியில் ஜனவரி 7ஆம் திகதி நுழையும் என்று இஸ்ரோ தலைவர் சோம்நாத் தெரிவித்தார்.

சூரியனின் வெளிப்புற பகுதியை ஆராய்வதற்காக ஆதித்யா எல் - 1 எனும் நவீன விண்கலத்தை இந்திய விண்வெளி ஆய்வு நிறுவனம் (இஸ்ரோ) வடிவமைத்தது. இந்த விண்கலம் பி. எஸ். எல். வி. சி-57 ஏவூர்தி மூலம் ஸ்ரீ ஹரி கோட்டாவில் இருந்து கடந்த செப்ரெம்பர் 2ஆம் திகதி விண்ணில் செலுத்தப்பட்டது. தொடர்ந்து சூரியனின் எல்-1 பகுதியை நோக்கிவிண்கலம் சீரான வேகத்தில் பயணித்து வருகிறது. பெங்களூரில் உள்ள இஸ்ரோவின் கட்டுப்பாட்டு மையத்தில் இருந்தவாறு விண்கலத்தின் செயல்பாடுகளை விஞ்ஞானிகள் கண்காணிக்கின்றனர்.

இந்நிலையில் ஆதித்யா விண்கலமானது சூரியனின் எல்-1 பகுதியில் வரும் ஜனவரி 7ஆம் திகதி நுழையும் என தகவல்கள் வெளியாகியுள்ளன. (ஐ)

### 39 பலஸ்தீன கைதிகளுக்கு பதில்:

# 24 பணய கைதிகளை விடுவித்தது ஹமாஸ்!

காஸா, நவ. 27

இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போர் நிறுத்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதியாக 39 பலஸ்தீனிய கைதிகளுக்கு ஈடாக 24 பணயக் கைதிகளை ஹமாஸ் விடுவித்தது.

கடந்த ஒக்ரோபர் 7ஆம் திகதி தெற்கு இஸ்ரேல் மீது பலஸ்தீனத்தில் உள்ள ஹமாஸ் தீவிரவாதிகள் திடீர் ஏவுகணை தாக்குதல் நடத்தினர். இதில் சுமார் ஆயிரத்து 200 பேர் உயிரிழந்தனர். மேலும் 200இற்கும் மேற்பட்டோர் பணயக் கைதிகளாக பிடித்து செல்லப்பட்டனர்.

இதையடுத்து காஸாமீது இஸ்ரேல் போர் தொடுத்தது. 40 நாட்களுக்கும் மேலாக நீடித்த போரில் காசாவில் 14 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் இறந்தனர். சுமார் 6 ஆயிரம் பேரை காணவில்லை என்று காஸா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் கட்டார், அமெரிக்கா, எகிப்து ஆகிய நாடுகளின் மத்தியஸ்த முயற்சியால் இஸ்ரேல் - ஹமாஸ் இடையே 4 நாட்கள் தற்காலிக போர் நிறுத்த உடன்பாடு ஏற்பட்டது.

இந்நிலையில் போர் நிறுத்த முதல் நாளான வெள்ளிக்கிழமை 24 பெண்கள், 15 சிறுவர்கள் என மொத்தம் 39 பேரை இஸ்ரேல் விடுவித்தது. இதற்கு ஈடாக 8 பெண்கள், 3 குழந்தைகள் உள்ளிட்ட 24 பணயக் கைதிகளை ஹமாஸ் விடுவித்தது. இந்த 24 பேரில் 13 இஸ்ரேலியர்கள் தவிர, தாய்லாந்தை சேர்ந்த 10 பேர் மற்றும் பிலிப்பைன்ஸை சேர்ந்த ஒருவரும் அடங்குவர் என்று கட்டார் தெரிவித்தது.

காஸாவில் போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மனிதாபிமான உதவிகள் கிடைக்க இந்த போர் நிறுத்தம் வழிவகுத்துள்ளது. இந்நிலையில் இரண்டாவது கட்டமாக ஹமாஸ் 14 பணயக் கைதிகளையும் இஸ்ரேல் 42 சிறைக் கைதிகளையும் விடுவிக்கவுள்ளது. (ஐ)



### நெதர்லாந்து பொது தேர்தல்:

# தீவிர வலதுசாரி தலைவரின் வெற்றியால் பெரும் அதிர்வலை!

ஆம்ரர்டாம், நவ. 27

நெதர்லாந்தின் பொதுத் தேர்தல் பெறுபேறு எதிர்பாராத திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. சர்ச்சைக்குரிய தீவிர வலதுசாரித் தேசியவாதி கீர்ட் வில்டேர்ஸ் பெற்றுள்ள வெற்றி உள்நாட்டிலும் ஐரோப்பிய மட்டத்திலும் அதிர்வுகளை ஏற்படுத்தி உள்ளது.

வில்டேர்ஸின் பி. வி. வி. கட்சி கடந்த தேர்தலை விடவும் அரை மடங்கு அதிகமாக 37 ஆசனங்களை அதிரடியாக வென்றுள்ளது. 150 ஆசனங்களைக் கொண்ட பாராளுமன்றத்தில் ஆட்சியமைப்பதற்கு குறைந்தது 76 ஆசனங்கள் அவசியம் என்பதால் அரசாங்கம் ஒன்றை அமைப்பதென்பது அவரின் தேசியவாதக் கட்சிக்கு கடும் சவாலாக இருக்கும்.

வில்டேர்ஸின் வெற்றி ஐரோப்பாவின் தீவிர வலதுசாரித் தலைவர்களின் பலத்த வரவேற்பை பெற்றிருக்கிறது.

ஐரோப்பாவில் தங்களுடைய அரசியல் கொள்கை பிரதான நீரோட்டத்துக்கு வந்துகொண்டிருப்பதை நெதர்லாந்துத் தேர்தல் வெற்றி உணர்த்துவதாக அவர்கள் உற்சாகத்துடன் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

60 வயதான கீர்ட் வில்டேர்ஸ் ஓர் ஐரோப்பிய எதிர்ப்புவாதி. இங்கிலாந்தின் 'பிரெக்ஸிட்' போன்று நெதர்லாந்தை ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து பிரித்துத் தனிமைப்படுத்தி மேன்மையாக்க வேண்டும் என்ற அரசியல் இலட்சிய நோக்கம் கொண்டவர். அதற்காக 'நெக்ஸிட்' வாக்கெடுப்பை நடத்த விரும்புபவர்.

பயங்கரவாத சம்பவங்களை முஸ்லிம்களது குடியேற்றத்துடன் நேரடியாகத் தொடர்புபடுத்திப் பகிரங்கமாக விமர்சித்து வருபவர், பள்ளிவாசல்களையும் புனித நூலான குர்ஆனையும் தடைசெய்யவேண்டும் என வாதாடி வருபவர்.

தேர்தல் வெற்றிக்குப் பின்னர் ஹேக் நகரில் ஆதரவாளர்களது ஆரவாரத்துக்கு மத்தியில் உரையாற்றிய கீர்ட் வில்டேர்ஸ், வெளிநாட்டு தஞ்சக் கோரிக்கையாளர்களால் ஏற்படக்கூடிய சுனாமிக்கு எதிராக நெதர்லாந்து மக்கள் வாக்களித்துள்ளனர் என்று தெரிவித்திருக்கிறார். (ஐ)



## காட்டிக்கொடுத்தவர்களை கொன்று மின்கம்பத்தில் தொங்கவிட்ட குழு!

காஸா, நவ. 27

அகதிகள் முகாமில் ஆயுதக் குழுவினர் பதுங்கியிருப்பது குறித்த இரகசிய தகவலை இஸ்ரேல் படையினருக்கு தெரிவித்தனர் என்று கூறி 2 பலஸ்தீனியர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது.

ஆயுதக் குழுவினர் நடத்திய இந்தத் தாக்குதலில் 2 பலஸ்தீனியர்களும் கொல்லப்பட்டனர்.

கொல்லப்பட்ட 2 பலஸ்தீனர்களின் உடல்களையும் ஆயுதக் குழுவினர் மின்கம்பத்தில் கட்டி தொங்கவிட்டனர். இந்த சம்பவம் தொடர்பான வீடியோ சமூகவலைதளத்தில் பரவி பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. (ஐ)

# உக்ரைன் தலைநகர் மீது ரஷ்யா தீவிர தாக்குதல்!



கீவ், நவ. 27

உக்ரைன் தலைநகர் கீவில் ரஷ்யா இதுவரை இல்லாதளவுக்கு தீவிர 'ட்ரோன்' தாக்குதலை நடத்தியுள்ளது.

இது குறித்து உக்ரைன் விமானப் படை வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ஈரானில் தயாரிக்கப்பட்ட 75 ஷஹீத் ட்ரோன்களை உக்ரைன் மீது ஏவி ரஷ்யா தாக்குதல் நடத்தியது. அவற்றில் 74 ட்ரோன்கள் உக்ரைன் பாதுகாப்பு ஏவுகணைகளால் இடைமறித்து அழிக்கப்பட்டன. இந்த தாக்குதலின் முக்கிய இலக்காக கீவ் நகரம் இருந்தது - என்றுள்ளது.

தங்களுக்கு எதிராக உருவாக்கப்பட்ட நேட்டோ அமைப்பில் உக்ரைன் இணைவது தங்களின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று ரஷ்யா கருதுகிறது. இருந்தாலும், உக்ரைனின் தற்போதைய அரசு நேட்டோவில் இணைய ஆர்வம் காட்டி வந்தது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து உக்ரைன் மீது ரஷ்யா கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் படையெடுத்தது.

இந்தப் போரில் கிழக்கு மற்றும் தெற்கு உக்ரைனைச் சேர்ந்த 4 பிரதேசங் களின் கணிசமான பகுதிகளை ரஷ்யா கைப்பற்றியது. அந்தப் பிரதேசங்களின் எஞ்சிய பகுதிகளைக் கைப்பற்றுவதற்காக ரஷ்யாவும், இழந்த பகுதிகளை மீட்ப தற்காக உக்ரைனும் போரிட்டு வருகின்றன.

எனினும், அண்மைக் காலமாக இரு தரப்பிலும் எந்த முன்னேற்றமும் ஏற் படாமல் இருந்து வருகிறது. இதை யடுத்து, உக்ரைன் போர் முடக்க நிலைக்கு வந்துவிட்டதாகக் கருதப்பட்டது. இந்த நிலையில், மீண்டும் தீவிர போரை இரு நாடுகளும் தொடங்கியுள்ளன. (ஐ)

# இணையவழி பாதுகாப்பு சட்டம் சுதந்திரத்தை மட்டுப்படுத்தும்!

## சமூகவலைதள பாவனையாளர் 56 வீதத்தினர் தெரிவிப்பு
## வெரிட்டே ரிசேர்ச் நிறுவனத்தின் ஆய்வில் தகவல்

கொழும்பு, நவ. 27

**வெரிட்டே ரிசேர்ச் நிறுவனத்தின் ஆய்வு ஒன்றில் இணைய வழி பாதுகாப்பு சட்டமூலம் குறித்து தங்களுக்குத் தெரியும் என்று கூறியவர்களில் 56 வீதம் பேர் இது சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவதற்கான சுதந்திரத்தை மட்டுப்படுத்தும் என்று கூறியுள்ளனர்.**

"சமூக ஊடகங்களில் நடத்தையை ஒழுங்குபடுத்தும் சட்ட மூலத்தை அரசாங்கம் பாராளுமன்றத்தில் அறிமுகப்படுத்தியது, அதைப் பற்றி உங்களுக்குத் தெரியுமா?" என்ற கேள்விக்கு, பதிலளித்தவர்களில் மூன்றில் ஒரு பகுதியினர் (34 வீதத்தினர்) "ஆம்" என்று பதிலளித்தனர்.

"ஆம்" என்று கூறியவர்களில், 56 வீதத்தினர் "சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் சுதந்திரத்தைக் இது மட்டுப்படுத்தும்" என்றும், 25 வீதம் பேர் "அதிக மாற்றத்தை ஏற்படுத்தாது" என்றும், 19 வீதம் பேர் "சமூக ஊடகங்களின் தவறான பயன்பாட்டைக் குறைக்கும்" என்றும் கூறியுள்ளனர்.

செப்ரெம்பர் 18 அன்று அரசாங்க வர்த்தமானியில் வெளியிடப்பட்டு ஒக்ரோபர் 3 அன்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட இணையவழி பாதுகாப்பு சட்டமூலம், வரையறுக்கப்பட்ட அதிகாரங்கள் மற்றும் செயல்பாடுகளைக் கொண்ட இணையவழி பாதுகாப்பு ஆணைக்குழுவொன்றை நிறுவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த சட்டமூலம் தனிப் பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்பட வேண்டுமாயின் அதிலுள்ள 31 வாசகங்களில் திருத்தம் செய்யப்பட வேண்டும் என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. அதன் தற்போதைய நிலையில் நிறைவேற்றப்படுவதற்கு, மூன்றில் இரண்டு பங்கு சிறப்பு பெரும்பான்மை தேவைப்படுகிறது.

நாடளாவிய ரீதியில் தேசியளவில் வயது வந்த இலங்கையர்கள் ஆயிரத்து 29 பேர் கொண்ட பதில் மாதிரியை அடிப்படையாகக் கொண்டு 2023 ஒக்ரோபரில் இந்த கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)




# சமத்துவ கட்சி பணிமனையில் மாவீரர்களுக்கு நினைவேந்தல்

கொழும்பு, நவ. 27

மாவீரர் தின நினைவேந்தலை முன்னிட்டு கிளிநொச்சி சமத்துவ கட்சியின் பணிமனையில் முன்னாள் போராளிகள், மாவீரர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களால் மாவீரர் நினைவேந்தல் உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்டது.

கட்சியின் மாவட்ட அமைப்பாளர் முன்னாள் போராளி வேங்கை தலைமையில் இடம்பெற்ற இந்த நினைவேந்தலில் பொதுச் சுடரை கரும்புலி மாவீரர்களான மேஜர் கதிரவன், லெப். கதிரவன் ஆகியோரின் சகோதரன் யோகராசாவும் ஈகைச் சுடரை மாவீரர் இரண்டாம் லெப்டினன்ட் பாபுவின் தந்தை இராமையாவும் ஏற்றி வைத்தனர்.

இதனை தொடர்ந்து மலர் மாலையை கரும்புலி மேஜர் நிலாகரனின் சகோதரி புஸ்பராணி, மாவீரர்களான தில்லையழகன், புன்னகைமாறன் ஆகியோரின் சகோதரன் குமார் ஆகியோர் அணிவித்தனர்.

தொடர்ந்து ஏனைய சுடர்கள் ஏற்றப்பட்டு மலர் அஞ்சலியும் இடம்பெற்றது. அத்துடன், மரக்கன்றுகளும் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)

# சாதாரண தர பெறுபேறு வெளியீடு தாமதமாகும்!

கொழும்பு, நவ. 27

விரைவில் வெளியாகும் என்று அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் க. பொ. த. சாதாரண தர பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

சாதாரண தர பரீட்சை பெறுபேறுகள் இம்மாத இறுதிக்குள் வெளியிடப்படும் என கல்வி அமைச்சு அறிவித்திருந்த நிலையில், தற்போது அதற்கான சாத்தியங்கள் மிகக்குறைவாக இருப்பதாக கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

நடைமுறை ரீதியாக நிலவுகின்ற சிரமங்களால் பரீட்சை முடிவுகள் வெளியாவது இன்னும் தாமதிக்கலாம் என்று கூறப்படுகிறது.

இதுதொடர்பாக கருத்து தெரிவித்த கல்வி அமைச்சின் பேச்சாளர் ஒருவர் இன்னும் ஓரிரு வாரங்களில் பரீட்சை பெறுபேறுகளை வெளியிட தீவிர முயற்சி எடுத்து வருவதாக தெரிவித்தார். (ஐ)

# ரூ. 34.9 கோடி பெறுமதியான மருத்துவ பொருட்கள் பாவனையிலிருந்து நீக்கம்!

கொழும்பு, நவ. 27

அரசாங்க மருத்துவமனைகளுக்கு விநியோகிக்கப்பட்ட மருத்துவ பொருட்களில் 34. 9 கோடி ரூபாய் பெறுமதியான மருந்துகள், சத்திரசிகிச்சை மற்றும் ஆய்வுக்கூட பொருட்கள் 2022ஆம் ஆண்டு பாவனையிலிருந்து விலக்கப்பட்டுள்ளன என்று தெரியவந்துள்ளது.

கணக்காய்வாளர் நாயகம் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட வருடாந்த அறிக்கையின் பிரகாரம், உரிய மருந்துகள், சத்திரசிகிச்சை மற்றும் ஆய்வகப் பொருட்கள் செயலிழந்ததால் பாவனையிலிருந்து விலக்கி கொள்ளப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், கடந்த வருடத்தில் 3.2 கோடி ரூபாய் பெறுமதியான மருந்துகள் பயனற்றவை என தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக கணக்காய்வாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மருத்துவமனைகளுக்கு மருந்துகளை வழங்குவதற்கு முன், அவற்றின் நிலையைப் பரிசோதிக்கும் திறன் மருத்துவ வழங்கல் துறைக்கு இல்லை என்றும், அதனால் மருந்துகள் பழுதடைந்தன என்று தெரிவிக்கப்படும் நேரத்தில் நோயாளிகள் பெரும்பாலான மருந்துகளை ஏற்கனவே பயன்படுத்தியிருப்பதும் தணிக்கையில் தெரியவந்துள்ளது. .

இதனிடையே, 2022 இறுதிக்குள், சுகாதாரத் துறையை நடத்துவதில் அத்தியாவசிய பதவிகளில் 1,331 மருத்துவ அதிகாரிகளின் வெற்றிடங்கள் இருக்கின்றன என்று கணக்காய்வாளர் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேலும், 77 பல் அறுவை சிகிச்சை நிபுணர்கள், 1,759 செவிலிய அதிகாரிகள், ஏனைய 275 செவிலியர்கள், 136 மருத்துவ ஆய்வக தொழில்நுட்ப வல்லுநர்கள், 68 தொழில் சிகிச்சையாளர்கள், 126 மருந்தாளுநர்கள் மற்றும் 270 தணிக்கையாளர்கள் வெறுமையாக உள்ளன.

இதேவேளை, 2022 ஆம் ஆண்டு வருகை மற்றும் புறப்பாடு தொடர்பான பதிவுகளை பதிவு செய்வதற்கு எடுக்கப்பட வேண்டிய கைரேகை இயந்திரத்தைப் பயன்படுத்தாமல் சுகாதார அமைச்சு 43,356 மில்லியன் ரூபாவை சம்பளத்திற்காக செலுத்தியுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதே ஆண்டில், மேலதிக நேர மற்றும் விடுமுறை ஊதியங்களை வழங்குவதற்காக 36,192 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளதுடன், இந்த தொகை சம்பள செலவில் 72 வீதமாகும் என கணக்காய்வாளர் நாயகத்தின் வருடாந்த அறிக்கை மேலும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

# மதுரங்குளி காளி கோயிலின் சிலைகள் உடைப்பு; திருட்டு!

கொழும்பு, நவ. 27

சிலாபம் - மதுரங்குளி - ஜோசப் வத்தை பகுதியில் அமைந்துள்ள காளி கோவிலில் அனைத்து சிலைகளும் உடைக்கப்பட்டு ஐம்பொன் சிலைகள் மற்றும் திரிசூலம் கொண்ட பெட்டி திருடப்பட்டுள்ளதாக மதுரங்குளி பொலிஸார் தெரிவித்தனர்.

அப்பகுதி மக்கள் வழிபட்டு வந்த காளி கோவிலில் இருந்த சுமார் இரண்டடி உயரமுள்ள இரண்டு சிலைகள் தரையில் வீசப்பட்டு உடைக்கப்பட்டன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேநேரம், காளி சிலைகளுக்கு அருகில் இருந்த பித்தளையால் செய்யப்பட்ட திரிசூலம், பெட்டியில் இருந்த காளி சிலைகள் உள்ளிட்ட பொருட்களும் திருடப்பட்டுள்ளன.

குறித்த காளி கோவில் மதுரங்குளி நகரத்திலிருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# போதைப்பொருள், ஆயுதங்களுடன் 4 பெண்கள் உட்பட 40 பேர் கைது!

கொழும்பு, நவ. 27

போதைப்பொருள் மற்றும் ஆயுதங்களுடன் 4 பெண்கள் உட்பட சுமார் 40 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கொழும்பு - வெல்லம்பிட்டி - சிங்கபுர பகுதியில் பொலிஸார், விசேட அதிரடிப் படையினர் மற்றும் இராணுவத்தினர் இணைந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை நடத்திய தேடுதல் நடவடிக்கையின்போதே இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைதானவர்கள் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் உறுப்பினர்கள் என்று கூறப்படுகின்றது.

மேல் மாகாணத்துக்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன், மேல் மாகாணம் தெற்குக்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் சயங்க மாரப்பன, மேல் மாகாண தெற்கு குற்றப் பிரிவின் பணிப்பாளர், பொலிஸ் அத்தியட்சகர் லித் அபேசேகர ஆகியோரின் பணிப்புரைக்கமைய இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நடவடிக்கையின் கீழ், 61 வீடுகள் மற்றும் 196 நபர்கள் சோதனை செய்யப்பட்டனர்.

இதன்போது ஹெரோயின், ஐஸ், சட்டவிரோத மதுபானம், வாள்கள், மன்னா கத்தி, தடை செய்யப்பட்ட கத்திகள் மற்றும் 12 கைபேசிகள் கைப்பற்றப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

# வங்கி அதிகாரி சடலமாக மீட்பு

கொழும்பு, நவ. 27

மாடி வீட்டில் தனியாக வசித்த வந்த வங்கி ஒருவர் உயிரிழந்து சில நாட்கள் கழிந்த நிலையில் அவரின் சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டது.

கொழும்பு - பன்னிப்பிட்டி - மாலபல்லை பிரதேசத்திலேயே இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

உயிரிழந்தவர் ஹோமாகம டென்ஸில் கொப்பேகடுவ மாவத்தையைச் சேர்ந்த சுதத் சிந்தக ரூபசிங்க (39) என்பவராவார். இவர் தனியார் வங்கியொன்றின் நிறைவேற்று அதிகாரி என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

குறித்த வீட்டிலிருந்து கடும் துர்நாற்றம் வீசியதால் ஒருவர் 119 என்ற அவசர பொலிஸ் இலக்கத்துக்கு வழங்கிய தகவலின் பேரில் பொலிஸார் அங்கு சென்று அறையின் யன்னலை உடைத்து உள்ளே சென்று குறித்த நபரின் சடலத்தை மீட்டுள்ளனர்.

அவ்வீட்டில் இவர் தனிமையில் வசித்து வந்துள்ளமை விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (ஐ)

## 13சிறுமிகள்....

ஆஜர்படுத்துமாறு உயர்நீதிமன்ற நீதிவான் பிரசன்ன அல்விஸ் குற்றப் புலனாய்வு திணைக்களத்திடம் தெரிவித்திருந்தார்.

அதிகளவிலான சிறுவர்கள் கண்டி மாவட்டத்தில் இருந்து கடத்தப்பட்டுள்ளனர் என்று தகவல்கள் வெளியாகியுள்ளது.

இந்தக் கடத்தல் தொடர்பாக நோர்வேயில் இருக்கும் இலங்கை பிரஜை ஒருவரிடம் இருந்து முறைப்பாடு கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ)

## இன்று....

சிவப்பு, மஞ்சள், வர்ண கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு நினைவேந்தலுக்கு தயார் நிலையில் உள்ளன. இன்று மாலை 6.05 மணிக்கு ஆலயங்களில் மணியோசை எழுப்பப்பட துயிலும் இல்லங்கள், வீடுகள், பொது இடங்களில் சமநேரத்தில் சுடர் ஏற்றப்படவுள்ளது.

**யாழ்ப்பாணத்தில்...**

யாழ்ப்பாணத்தில் கோப்பாய், கொடிகாமம், உடுப்பிட்டி - எள்ளங்குளம், வடமராட்சி கிழக்கு - உடுத்துறை, வேலணை - சாட்டி மாவீரர் துயிலும் இல்லங்களில் நினைவேந்தல்கள் நடைபெறவுள்ளன.

அத்துடன், நல்லூர், நெல்லியடி - மாலைசந்தியில் விசேடமாக அமைக்கப்பட்டுள்ள மாவீரர் நினைவாலயங்களிலும் தியாகி திலீபன் நினைவுத் தூபி, யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள மாவீரர் நினைவிடம் மற்றும் மாவீரர்களின் நினைவாக அமைக்கப்பட்ட இடங்களிலும் நினைவேந்தல்கள் நடைபெறவுள்ளன.

**கிளிநொச்சியில்...**

கிளிநொச்சி மாவட்டத்தில் கனகபுரம், முழங்காவில் மாவீரர் துயிலும் இல்லங்களிலும் மாவீரர் நினைவிடங்களில் நினைவேந்தல் நடைபெறவுள்ளது.

**முல்லைத்தீவில்...**

முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு - தேராவில், முள்ளியவளை, ஆலங்குளம், இரணைப்பாலை, அளம்பில், வன்னிவிளான்குளம், முள்ளிவாய்க்கால் துயிலும் இல்லங்களிலும் கொக்குத்தொடுவாய், களிக்காடு, தேவிபுரம், இரட்டைவாய்க்கால், முல்லைத்தீவு நகர கடற்கரை, சுதந்திரபுரம் ஆகிய இடங்களில் மாவீரர்களை அஞ்சலிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**மன்னாரில்...**

மன்னார் மாவட்டத்தில் ஆட் காட்டிவெளி, பெரிய பண்டிவிரிச்சான், முள்ளிக்குளம் துயிலும் இல்லங்களிலும் மாவீரர்களின் நினைவிடங்களிலும் நினைவேந்தல் முன்னெடுக்கப்படவுள்ளது. இதேபோன்று வவுனியாவில் ஈச்சங்குளம் துயிலும் இல்லத்திலும் நகரப் பகுதியிலும் மாவீரர்கள் அஞ்சலிக்கப்படவுள்ளனர்.

**மட்டக்களப்பில்...**

மட்டக்களப்பு மாவட்டத்தில் தரவை, கண்டலடி, மாவடி முன்மாரி, தாண்டியடி, துயிலும் இல்லங்களில் மற்றும் விசேடமாக அமைக்கப்பட்ட இடங்களில் மாவீரர் நினைவேந்தல்கள் நடைபெறவுள்ளன. அத்துடன், அம்பாறை மாவட்டத்தில் கஞ்சிகுடிச்சாறு துயிலும் இல்லத்தில் நினைவேந்தல் முன்னெடுக்கப்படவுள்ளது. அத்துடன், கிழக்கு பல்கலைக்கழகத்திலும் நினைவேந்தல் முன்னெடுக்கப்படவுள்ளது.

திருகோணமலை நகரப் பகுதியிலும் விசேட இடங்களிலும் மாவீரர் நினைவேந்தல்கள் நடைபெறவுள்ளன.

**வரலாறு**

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் முதல் மாவீரரான லெப். சங்கர் (செல்வச்சந்திரன் சத்தியநாதன்) உயிர்நீத்த (1982) நவம்பர் 27ஆம் நாளில் அந்த அமைப்பின் சார்பில் மாவீரர்களானவர்கள் நினைவு கூரப்படுகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# ஒழுக்கம் தவறிய 9 எம். பிக்கள் மீதான விசாரணைக்கு சபாநாயகர் பணிப்பு!

கொழும்பு, நவ. 27

ஒழுக்கமற்ற முறையில் நடந்து கொண்டனர் என்று கூறப்படும் 9 பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு எதிராக சமர்ப்பிக்கப்பட்ட 6 முறைப்பாடுகளை விசேட முன்னுரிமையுடன் விசாரிக்குமாறு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன நெறிமுறைகள் மற்றும் சிறப்புரிமைகள் குழுவின் தலைவர் சமல் ராஜபக்ஷவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

இதன்படி நாளை செவ்வாய்க்கிழமை முதல் 30ஆம் திகதி வியாழக்கிழமை வரை நெறிமுறைகள் மற்றும் சிறப்புரிமைகள் குழு தொடர்ச்சியாக கூடவுள்ளது.

இராஜாங்க அமைச்சர் டயானா கமகே மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களான சுஜித் சஞ்சய் பெரேரா மற்றும் ரோஹன பண்டார ஆகியோருக்கு இடையில் இடம்பெற்ற மோதல் தொடர்பான முறைப்பாடு, பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜயசிறி, பாராளுமன்ற உதவிச் செயலாளர் நாயகம் ஹன்ச அபேரத்னவுக்கு அச்சுறுத்தல் விடுத்த சம்பவம் தொடர்பான முறைப்பாடு, இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்னவுக்கு எதிராக பாராளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜயசிறி சமர்ப்பித்துள்ள முறைப்பாடு, இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்தவுக்கு எதிராக எதிர்க்கட்சித் தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட முறைப்பாடு, பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டாரவுக்கு எதிராக பாராளுமன்ற உறுப்பினர் சனத் நிஷாந்த சமர்ப்பித்த முறைப்பாடு மற்றும் சட்டவிரோதமான முறையில் தங்கம் கொண்டு வந்தமை தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமுக்கு எதிரான முறைப்பாடு ஆகியவை தொடர்ச்சியாக விசாரணைக்கு உட்படுத்தப்படவுள்ளன.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன, இந்த முறைப்பாடுகள் அனைத்தையும் வரவு - செலவுத் திட்டம் முடிவதற்குள் விசாரித்து முடிக்குமாறு சிறப்புரிமைகள் குழுவின் தலைவர் சமல் ராஜபக்ஷவுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

நெறிமுறைகள் மற்றும் சிறப்புரிமைகள் குழு இந்த ஆறு முறைப்பாடுகளையும் ஆராய்ந்து, கூடிய விரைவில் சபாநாயகருக்கு பரிந்துரைகளை வழங்கும். பின்னர் சபாநாயகர் பரிந்துரைகளை பாராளுமன்றத்தில் சமர்ப்பிப்பார். (ஐ)

# பிரதமர் பணிமனை செலவினம் 46 வீதம் குறைப்பு

கொழும்பு, நவ. 27

2022 ஒக்ரோபர் மாதத்துடன் ஒப்பிடுகையில் 2024 ஆம் ஆண்டு 46 சதவீதம் குறைக்கப்பட்டுள்ளதாக பிரதமர் பணிமனை தெரிவித்துள்ளது.

2021 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டு பிரதமர் பணிமனையின் செலவுகள் 21 வீதமாகவும், 2023ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்துக்குள் 46 வீதமாகவும் குறைக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

2021ஆம் ஆண்டில் 166 கோடியே 17 இலட்சம் ரூபாய் செலவானது. 2022 ஆம் ஆண்டில் 131 கோடியே இலட்சம் ரூபாயாகக் குறைக்கப்பட்டது.

இந்த ஆண்டு ஒக்ரோபர் வரையில் 70 கோடியே 57 இலட்சம் ரூபாயாக குறைக்க நடடிவடிக்கை எடுப்பட்டிருந்தது என்று தெரிவிக்கப்பட்டது.

2021ஆம் ஆண்டு பிரதமர் பணிமனைக்கான வரவு-செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்ட நிதி 166 கோடியே 17 இலட்சம் ரூபாயாகும். அத்துடன், 2022 ஆம் ஆண்டு 143 கோடியே 28 இலட்சம் ரூபாயாகும். எனினும், 131 கோடியே 4 இலட்சம் ரூபாய் மாத்திரம் செலவிடப்பட்டுள்ளது.

2023 ஆம் ஆண்டு 101 கோடியே 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிலையில், 70 கோடியே 57 இலட்சம் ரூபாயே செலவிடப்பட்டது.

தினேஷ் குணவர்தன பிரதமராக பதவியேற்பதற்கு முன்னதாக, 2021 முதல் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் பிரதமர் அலுவலகத்தில் 500 பணியாளர்கள் காணப்பட்ட நிலையில், தற்போது இந்த எண்ணிக்கை 285 ஆக குறைக்கப்பட்டுள்ளது.

இலத்திரனியல் அமைப்புகள் மூலம் பணிமனைப் பணிகள் அமுல்படுத்தப்பட்டதன் மூலம் எழுதுபொருட்கள் நூற்றுக்கு 74 வீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

பிரதமர் பணிமனைக்கு வரும் கடிதங்களுக்கு பதில் அனுப்பும் செயல்முறை இலத்திரனியல் மயமாக்கப்பட்டதன் காரணமாக, தபால் மற்றும் தகவல் தொடர்பு செலவுகள் 36 வீதமாக குறைக்க முடிந்துள்ளது.

2022 ஆம் ஆண்டில், பிரதமர் அலுவலகத்தில் 178 வாகனங்கள் பயன்படுத்தப்பட்ட நிலையில், 2023 ஆம் ஆண்டின் இறுதிக்குள் தேவைகளுக்கு போதுமான 125 வாகனங்கள் மட்டுமே இருக்குமென குறிப்பிடப்பட்டுள்ளது.

## கிழக்கு....

ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஒப்பீட்டளவில் வடக்கு மாகாணத்தை விட கிழக்கு மாகாணத்திலேயே அதிகளவான நெருக்கடிகளும் தடைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவடி முன்மாரி, திருகோணமலை - சம்பூர் துயிலும் இல்லங்களில் மாவீரர் நினைவேந்தலுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளன.

மாவடி முன்மாரி துயிலும் இல்லத்தில் கட்டப்பட்ட கொடிகள் மற்றும் சோடனைகள் அகற்றப்பட்டுள்ளன. அத்துடன், நினைவேந்தலை முன்னெடுக்க முடியாதவாறும் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன், மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு பொலிஸ் நிலையங்கள் மூலம் மாவீரர்களை நினைவுகூருவதற்கு 19 பேருக்கு தடைகள் விதிக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு - வெல்லாவெளியில் ஜனநாயக போராளிகள் கட்சியின் உபதலைவர் நகுலேஸ் பயங்கரவாத சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை - சம்பூர் துயிலும் இல்லத்திலும் தடைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தின் கஞ்சிகுடிச்சாறு மாவீரர் துயிலும் இல்லத்திலும் நெருக்கடிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தவிர, கிழக்கு மாகாணத்தின் துயிலும் இல்லங்கள், மாவீரர் நினைவுத் தூபிகள் அமைந்துள்ள இடங்கள் மற்றும் நகரப் பகுதிகளில் புலனாய்வாளர்கள், படைத்தரப்பினர்கள் குவிக்கப்பட்டு அச்சுறுத்தல் நிலைமை ஏற்படுத்தப்பட்டுள்ளது. (ஐ)

# "போரை முடிவுக்கு கொண்டுவந்ததே மகிந்த ராஜபக்ஷ செய்த ஒரே தவறு!"

கொழும்பு, நவ. 27

"இலங்கையில் தமிழ் மக்களின் தலைவலிக்கு ஒரு மாத்திரையும், சிங்கள மக்களின் தலைவலிக்கு வேறொரு மாத்திரையும் கிடையாது. இருக்கும் ஒரு மாத்திரையை பங்கிட்டுக்கொண்டுதான் முன்னோக்கி செல்ல வேண்டும்." - என்று சிறீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான சி. பி. ரத்நாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

""இந்நாட்டில் சிங்கள - பௌத்த மக்கள் ஒரு விதத்திலும், தமிழ் மக்கள் இன்னுமொரு விதத்திலுமே கவனிக்கப்படுகின்றனர் என்று எனக்கு முன்னர் உரையாற்றிய கூட்டமைப்பு எம்.பி. (கோவிந்தம் கருணாகரன்) சுட்டிக் காட்டினார்.

தமிழ் மக்களின் தலைவலிக்கு ஒரு மாத்திரையும், சிங்கள மக்களின் தலைவலிக்கு மற்றொரு மாத்திரையும், முஸ்லிம் மக்களின் தலைவலிக்கு வேறொரு மாத்திரையும் கிடையாது . எல்லோரினது தலைவலிக்கும் ஒரு மாத்திரைதான் இருக்கின்றது. அதனை பங்குண்டுதான் இலங்கையராக முன்னோக்கி செல்ல வேண்டும். - என்றார்.

## பொலிஸ்....

பிரதாபனின் இறுதிக்கிரியை நேற்று அவரின் இல்லத்தில் நடைபெற்றது.

பூரண அரச மரியாதையுடன் நடைபெற்ற அவரின் இறுதிக் கிரியையில் மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் கலந்துகொண்டு உயிரிழந்தவருக்கு இறுதி மரியாதையை செலுத்தினார். அத்துடன், உயிரிழந்தவரின் குடும்பத்துக்கு ஆறுதல் கூறி ஒரு தொகை பணத்தையும் கையளித்தார்.

உயிரிழந்த பொலிஸ் கான்ஸ்டபிள் கிருஷ்ணமூர்த்தி பிரதாபன் பொலிஸ் சார்ஜன்டாக பதவி உயர்த்தப்பட்டதுடன், அவருக்குரிய கொடுப்பனவுகளை குடும்பத்தினருக்கு வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் இதன்போது சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் உறுதியளித்தார்.

இந்த இறுதிக்கிரியையில் பொலிஸ் அதிகாரிகள், பொலிஸார், படைத் தரப்பினர், பொதுமக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

உயிரிழந்த பொலிஸ் உத்தியோகத்தர் உள்ளிட்ட மேலும் நான்கு பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஜா-எல பகுதியில் நீரோடை மூலம் தப்பிச் செல்ல முயன்ற சந்தேக நபரை துரத்திச் சென்றனர். அச்சமயம் பிரதாபன் நீரில் மூழ்கி உயிரிழந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## ஒக்.17....

கூறினார்.

அரசமைப்பு சட்ட கட்டமைப்புகளை பின்பற்றவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியுள்ள அவர் அரசமைப்பு மற்றும் ஜனாதிபதி தேர்தல் சட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களை முழுமையாக பின்பற்றியே தேர்தல் திகதி அறிவிக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலுக்கான அத்தியாவசிய நடவடிக்கைகள் ஆரம்பமாகியுள்ளன. தேர்தலுக்கான ஏனைய நடவடிக்கைகளுக்கான நிதியை பெறுதல் ஆவணங்களை தயாரித்தல் போன்ற நடவடிக்கைகள் அடுத்த வருடம் ஆரம்பமாகும் என்றும் கூறினார்.

இதேவேளை 2025ஆம் ஆண்டிலேயே பொதுத்தேர்தல் எதிர்பார்க்கப்படுகின்றது. புதிதாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி நாடாளுமன்றத்தை கலைத்துவிட்டு தேர்தல்களை துரிதப்படுத்துவதற்கான வாய்ப்புகள் உள்ளதை ஏற்றுக்கொண்டார். (ஐ)

ஈழநாடு
Eelanadu


# தொழில் முயற்சி கிராமம் மூலமாக பொருளாதாரம் வலுப்படுத்தப்படும்

## அநுராதரபுரத்தில் காணி வழங்கிய பின்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, நவ. 27

**ஒவ்வொரு கிராமத்தையும் தொழில் முயற்சி கிராமமாக அபிவிருத்தி செய்வதன் மூலம் ஏற்றுமதி பொருளாதாரம் வலுப்படுத்தப்படும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.**

**இதற்கு தேவையான வசதிகளை வழங்குவதற்காக விவசாய நவீனமயமாக்கல் சேவை நிலையங்களை நிறுவுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.**



2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்ட முன்மொழிவான "உறுமய" தொடர்பாக மக்களுக்கு விழிப்புணர்வு வழங்கும் நிகழ்ச்சியின் முதல் கட்டத்தை அநுராதபுரம் நொச்சியாகமவில் நேற்று ஜனாதிபதி ஆரம்பித்து வைத்தார்.

இதன்போது அவர்,

ஷங்ரிலா ஹோட்டலுக்கு காணி உறுதிப்பத்திரம் வழங்க முடியுமாயின், எமது நாட்டில் பரம்பரை பரம்பரையாக விவசாயம் செய்து வரும் மக்களுக்கு காணி உறுதிப் பத்திரம் வழங்குவதில் என்ன தவறு?

ஷங்ரிலா அமைந்துள்ள காணியால் இலங்கைக்கு அந்நியச் செலாவணி கிடைப்பதைப் போன்றே நவீன விவசாய கைத்தொழில் மூலம் ஏற்றுமதிப் பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும். நாட்டிலுள்ள விவசாயம் செய்யும் மக்களுக்கு இலவச காணி உறுதிப் பத்திரங்களை வழங்குவது என்பது அவர்களது முன்னோர்களின் பாரம்பரியத்தை வழங்குவதாகவே இருக்கும் என்பதோடு அரசாங்கத்துக்கு நன்றி தெரிவிப்பதாகவும் இருக்கும்.

2024 வரவு செலவுத் திட்டத்தில் "உறுமய" காணி உறுதிப்பத்திரம் வழங்குவதற்காக 200 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டவர்கள் இலங்கையில் நிலங்களை கையகப்படுத்திய பின்னர், அந்த நிலங்களில் பயிரிடுவதற்கு பூர்வீக மக்களுக்கு உரிமம் வழங்கியிருந்தனர்.

ஆனால், 1935ஆம் ஆண்டின் காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் ஊடாக உள்நாட்டவர்களுக்கு காணி உறுதிகளை வழங்குவதற்கு மற்றோர் அனுமதிப் பத்திர முறை அறிமுகப்படுத்தப்பட்டது. காணியை வைத்திருப்போருக்கு பயிர்ச்செய்கை மேற்கொள்ளவும் வீடுகளை கட்டவும் அனுமதி வழங்கப்பட்டது. ஆனால், நிலத்தின் உரிமையை மற்றவருக்கு மாற்றவோ விற்கவோ அதிகாரம் வழங்கப்படவில்லை.

ஜயபூமி, சௌமிய பூமி, ஸ்வர்ணபூமி போன்ற அனைத்து காணி உறுதிகளுக்குப் பதிலாக காணி உறுதிப்பத்திரம் வழங்க 2024ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்மொழிந்துள்ளார்.

இதன்படி, 2024ஆம் ஆண்டு முதல் இந்த அனுமதிப் பத்திரங்களை வழங்கும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுப்பதற்காக எமக்கு அபிவிருத்தி நடவடிக்கைகளை நிறுத்த வேண்டியிருந்தது. இப்போது வங்குரோத்து நிலை முடிந்துவிட்டதால், தடைப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை மீண்டும் தொடங்க எங்களுக்கு வாய்ப்பு உள்ளது.

அத்துடன், அநுராதபுரம் மாவட்டத்தில் மல்வத்து ஓயா மற்றும் மகா விகாரை போன்றவற்றின் பணிகளை ஆரம்பிக்க திட்டமிட்டுள்ளோம். குறிப்பாக மல்வது ஓயா என்பது சிங்கள நாகரிகம் ஆரம்பமான இடமாகும். மகா விகாரை தேரவாத பௌத்தத்தின் மையமாகும். இந்த இரண்டு இடங்களையும் பாதுகாக்காமல் எந்த அபிவிருத்தி செய்தாலும் பயனில்லை - என்றார். (ஐ)

# நாட்டுக்காக சிந்தித்து முடிவு எடுக்க வேண்டும்

## பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர்

கொழும்பு, நவ. 27

கடுமையான பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்திருந்த இக்கட்டான சூழ்நிலையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்றார். வீழ்ந்துள்ள நாட்டை கட்டியெழுப்பக்கூடிய திறமை ஜனாதிபதிக்கு உள்ளது. அதனாலேயே நாம் ஆதரவு வழங்கினோம். அனைத்து சந்தர்ப்பங்களிலும் நாட்டுக்காக சிந்தித்து தீர்மானங்களை எடுக்க வேண்டும் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

மாத்தளை மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புகுழு கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றியபோதே இராஜாங்க அமைச்சர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

நாடு சுதந்திரமடைந்து இதுவரையில் எந்தவொரு தலைவரும் சந்திக்காத பிரச்னைகளுக்கு மத்தியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டை பொறுப்பேற்றார். நெருக்கடிக்கு மத்தியில் மிகவும் இக்கட்டான நிலைமையிலேயே அவரை நாம் ஜனாதிபதி பதவியில் அமர்த்தினோம்.

அன்று ஜனாதிபதி செயலகம், ஜனாதிபதி மாளிகை போராட்டகாரர்களால் ஆக்கிரமிக்கப்பட்டன. அலரி மாளிகையும் ஆக்கிரமிக்கப்பட்டது. பாராளுமன்றம் சுற்றிவளைக்கப்பட்டது. ஜனாதிபதியின் இல்லம் தீக்கிரையாக்கப்பட்டது. அந்த சந்தர்ப்பத்தில் அவருக்கு தங்குவதற்கு கூட இடமிருக்கவில்லை.

மேலும், டலஸ் அழகப்பெரும எமது நல்ல நண்பர். ஜானக பண்டார தென்னக்கோன் பாராளுமன்றத்தில் இருக்கும் நெருங்கிய நண்பரும்கூட. நாம் நண்பர் அடிப்படையில் சிந்திக்கவில்லை. வீழ்ந்த நாட்டை எவ்வாறு மீண்டும் கட்டியெழுப்புவது, நெருக்கடிகளிலிருந்து எவ்வாறு மீள்வது என்பதையே நாம் சிந்தித்தோம். நாட்டை கட்டியெழுப்பக்கூடிய அடுத்த தலைவர் யார் என்பதையே சிந்தித்தோம்.

அதன் காரணமாகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கினோம். தலைவர் என்பவர் சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டும். வீதிப் போராட்டங்களையும் ஆர்ப்பாட்டங்களையும் மேற்கொள்வதன் மூலம் சில விடயங்களை செய்துவிட முடியாது. புதியதொரு நாட்டில் இருக்கிறோம்.

புதிய அரசியல் கலாசாரம் ஒன்றுக்குள் இருக்கிறோம் என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். நாட்டின் நன்மை கருதி சரியான தீர்மானங்களை மேற்கொள்ள வேண்டும். எமது மாற்றம் நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் - என்றார். (ஐ)

# 154 கோடி அமெரிக்க டொலர் நேரடி முதலீடாக கிடைத்தது!

கொழும்பு, நவ. 27

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில், 154 கோடியே 70 இலட்சம் அமெரிக்க டொலர்கள் வெளிநாட்டு நேரடி முதலீடாக கிடைக்கப்பெற்றுள்ளன என்று முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்ட இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம இதனை தெரிவித்துள்ளார்.

இதுதவிர உள்நாட்டு முதலீட்டாளர்கள் குறித்த காலப்பகுதியில், 25 கோடியே 80 இலட்சம் அமெரிக்க டொலர் முதலீடு செய்துள்ளனர்.

அத்துடன், கடந்த வருடத்தில் நாட்டில் பல பாதகமான சூழ்நிலை ஏற்பட்ட போதிலும், வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்ய ஆர்வமாக இருப்பதனை குறித்த புள்ளிவிவரங்கள் வெளிப்படுத்துகின்றன. அத்துடன், வெளிநாட்டவர்கள் இலங்கையை புறக்கணிக்கவில்லை என்பதும் மகிழ்ச்சியளிப்பதாக உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, இந்த வருடத்தில் இதுவரையான காலப் பகுதியில் இலங்கை முதலீட்டு சபை 150 கோடி அமெரிக்க டொலர் பெறுமதியான முதலீட்டு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளனர்.

அதற்கமைய சீனா, இந்தியா, அமெரிக்கா, பிரான்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட பல நாடுகள் இலங்கையில் முதலீட்டு நடவடிக்கைகளில் ஈடுபட ஆர்வமாக உள்ளதாக இலங்கை முதலீட்டுச் சபை தெரிவித்துள்ளது. (ஐ)

# புலிகளின் ஆயுதங்களை தேடி அகழ்வு நேற்றும் தொடர்ந்தது!

முல்லைத்தீவு, நவ. 27

முள்ளிவாய்க்காலில் நேற்று நான்காவது நாளாகவும் புலிகளின் ஆயுதங்களை தேடி அகழ்வுப் பணி தொடர்ந் தது.

இறுதிப் போரின்போது புலிகள் ஆயுதங்களைப் புதைத்து வைத்தனர் என்று சந்தேகிக்கப்படும் இடம் ஒன்று பொலிஸாரால் நீதிமன்றின் அனுமதியுடன் தோண்டப்பட்டது.

கடந்த 23ஆம் திகதி முள்ளி வாய்க்கால் மேற்கில் ஆரம்பமானது. நேற்றும் இந்தப் பணி தொடர்ந்திருந் தது.

பொலிஸ் புலனாய்வாளர்களுக்குக் கிடைத்த தக வலுக்கு அமையவே இந்தப் பகுதி தோண்டப்பட்டு வருகின்றது.



முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிபதி தர்மலிங்கம் பிரதீபன் முன்னிலையில் பொலிஸார், விஷேட அதிரடிப் படையினர், இராணுவத்தினர், கிராம சேவையாளர், தொல்லியல் திணைக்களத்தினர், சுகாதார பிரிவினர், தடயவியல் பொலிஸார் பிரசன்னத்துடன் இந்தப் பணி இடம்பெற்று வருகின்றது. (ஐ-10)

# மருத்துவர்களின் சம்பளத்தை அதிகரிப்பதற்கு முன்மொழிவு

கொழும்பு, நவ. 27

மருத்துவர்களின் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை அதிகரிப்பதற்கான முன்மொழிவுகளை சுகாதார அமைச்சு தயாரித்துள்ளதாக தெரிவிக் கப்படுகின்றது.

இதன்படி சேவையில் இணையும் மருத்துவர் ஒருவரின் அடிப்படை சம்பளத்தை 75 ஆயிரம் ரூபாயாக அதிகரிக்க முன்மொழியப்பட்டுள்ளது. தற்போது மருத்துவர் ஒருவரின் முதல் சம்பளம் சுமார் 54ஆயிரம் ரூபாயாகும்.

நீண்ட காலமாக தீர்க்கப் படாத சம்பளம் மற்றும் தொழில்சார் பிரச்னைகள் காரணமாக வெளிநாடு செல்லும் மருத்துவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் இது குறித்து சுகாதார அமைச்சு கவனம் செலுத்தியுள்ளது. (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 27.11.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# பலஸ்தீனம்:

# மேற்கு உலகை மிரட்ட அரபு நாடுகள் எண்ணெய் ஏற்றுமதியை நிறுத்தினால்?




அரை நூற்றாண்டுக்கு முன்பு அரபு நாடுகள் இஸ்ரேல் மீது தாக்குதல் தொடுத்தன. இந்தப் போர் 'யோம் கிப்பூர் போர்' என வரலாற்றில் அறியப்படுகிறது. அந்தப் போரின் விளைவாக இஸ்ரேலில் புதிதாக உருவான யூத அரசை அமெரிக்கா ஆதரித்தது.

அமெரிக்காவுக்கு பதிலடி கொடுக்க, அரபு நாடுகள் மேற்கத்திய நாடுகளுக்கு எண்ணெய் விநியோகத்தை நிறுத்தின.

இந்த முடிவு உலகப் பொருளாதாரத்திலும், எரிசக்திக் கொள்கையிலும், மத்திய கிழக்கின் அதிகாரச் சமநிலையிலும் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

இந்தச் சம்பவம் நடந்து சரியாக 50 ஆண்டுகளுக்குப் பிறகுதான், தற்போது இஸ்ரேல் - ஹமாஸ் இடையிலான போர் நடந்து வருகிறது.

இஸ்ரேலுடன் அமெரிக்கா துணை நிற்கும் சூழலில், காஸா மீது இஸ்ரேல் தொடர்ச்சியான தாக்குதலைத் தொடுத்து வருகிறது.

இஸ்ரேலின் செயலால் அரபு நாடுகள் கோபத்தில் உள்ளன. இவ்வாறான நிலையில் போரை முடிவுக்குக் கொண்டு வரவோ அல்லது இஸ்ரேலை பணிய வைக்கவோ, அரபு நாடுகள் மேற்கத்திய நாடுகளுக்கு எண்ணெய் விநியோகத்தைத் தடை செய்து அழுத்தம் கொடுக்குமா என்கிற கேள்வி எழுந்துள்ளது.

அரபு நாடுகள் மேற்குலக நாடுகளுக்கு எதிராக எண்ணெய் ஆயுதத்தைப் கையில் எடுப்பார்களா? இதற்கு முன்பு அரபு நாடுகள் எண்ணெய் விநியோகத்தை நிறுத்தியபோது அது உலகப் பொருளாதாரத்தில் எந்தளவுக்கு தாக்கத்தை ஏற்படுத்தியது? இங்கு விரிவாகப் பார்க்கலாம்.





**எண்ணெய் விநியோகம் தடைபடுமா? சவூதி அரேபியா என்ன சொல்கிறது?**

கொரோனா பேரிடர், சீனாவுடனான மேற்கத்திய நாடுகளின் வர்த்தகப் போர், உக்ரேன் மீதான ரஷ்யாவின் தாக்குதல் மற்றும் ஐரோப்பாவிற்கு எதிரான அதன் ஆக்கிரமிப்பு எரிவாயு கொள்கை ஆகியவை ஏற்படுத்திய பாதிப்புகளோடு உலகப் பொருளாதாரம் இன்னும் போராடி வருகிறது.

மத்திய கிழக்கு மற்றும் வட ஆப்பிரிக்காவின் எண்ணெய் மற்றும் எரிவாயு வளமிக்க நாடுகள் எண்ணெய் உற்பத்தியைக் குறைப்பதற்கும், 'நட்பற்ற நாடுகளுக்கு' விநியோகத்தை நிறுத்துவதற்கும் ஒப்புக் கொண்டால், அது உலகப் பொருளாதாரத்தில் பெரும் நெருக்கடிக்கு வழிவகுக்கும்.

யோம் கிப்பூர் போரின்போது இருந்த சூழ்நிலைக்கும் மத்திய கிழக்கின் இன்றைய நிலைமைக்கும் இடையே சில ஒற்றுமைகள் உள்ளன. ஆனால் சில வேறுபாடுகளும் இல்லாமல் இல்லை என்கிறார் சர்வதேச எரிசக்தி முகமையின் தலைவரான பத்தி பிரோல்.

அவர் கூறுகையில், "உலகின் ஆற்றல் சந்தை எழுபதுகளில் இருந்து வியத்தகு முறையில் மாறிவிட்டது. அரபு நாடுகள் எண்ணெய் விநியோகத்தை நிறுத்த முடிவு செய்ததை அடுத்துதான் மேற்கத்திய நாடுகள் சர்வதேச எரிசக்தி முகமையை உருவாக்கின. ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இருந்ததைவிட உலகம் இதுபோன்ற சூழ்நிலைகளைச் சமாளிக்கத் தயாராக உள்ளது," எனத் தெரிவித்தார்.

மேற்கத்திய நாடுகளுக்கான எண்ணெய் விநியோகத்தை நிறுத்துவது குறித்து இஸ்ரேலின் எதிர்ப்பாளர்களும், பாலத்தீன ஆதரவாளர்களும் இதுவரை அதிகாரபூர்வமாக எதையும் அறிவிக்கவில்லை.

ஆனால் நவம்பர் 7ஆம் தேதி, சவூதி அரேபியாவின் அமைச்சர் காலித் அல்-பாலிஹிடம், போரை முடிவுக் குக் கொண்டு வருவதற்கு எண்ணெய்யை ஆயுதமாகப் பயன்படுத்த உங்கள் நாடு தயாரா என நிகழ்ச்சி ஒன்றில் அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்குப் பதிலளித்த, காலித் அல்-ஃபாலிஹ், "இன்று இந்த விருப்பத்தை நாங்கள் பரிசீலிக்கவில்லை. சவூதி அரேபியா அமைதிப் பேச்சுவார்த்தை மூலம் அமை தியை அடைய விரும்புகிறது," என்று புன்னகையுடன் பதிலளித்தார்.

**எண்ணெய் விநியோகத் தடைக்கு ஆதரவளிக்கும் ஈரான்**

இஸ்ரேல்-ஹமாஸ் போர் தீவிரம் அடைந்த சூழலில் கடந்த நவம்பர் 11ஆம் தேதி சவூதி அரேபியா தலைநகர் ரியாத்தில் அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகளின் அவசர மாநாடு நடைபெற்றது. இதில், எண்ணெய் விநியோ கத்தை நிறுத்துவது குறித்துப் பெரிதாக விவாதிக்கப்பட வில்லை.

அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் மீது அழுத்தத்தை அதிகரிக்க சில நாடுகள் பல யோசனைகளை முன் வைத் தன. ஆனால் எரிசக்தி தடைகள் பற்றி ஒரு வார்த்தை கூடப் பேசவில்லை.

ஆனால் அமெரிக்காவிற்கும் இஸ்ரேலுக்கும் எதிரியான ஈரானின் உச்ச தலைவர் அயதுல்லா அலி கமேனி, இஸ்ரேலுக்கு எண்ணெய் விநியோகத்தைக் குறைக்க வேண்டும் என முன்மொழிந்தார். ஆனால் அதற்கு மற்ற நாடுகளின் ஆதரவு கிடைக்கவில்லை.

இஸ்ரேல் தினசரி மூன்று லட்சம் பீப்பாய்கள் எண்ணெய் வாங்குகிறது. இஸ்ரேலுக்கு எண்ணெய் வழங்கும் நாடுகளில் கஜகஸ்தான் மற்றும் அஜர்பைஜான் ஆகியவையும் அடங்கும்.

ஈரானின் முறையீட்டின் பேரில், அரபு மற்றும் இஸ்லாமிய நாடுகள், எண்ணெய் விநியோக விவகாரத் தில் அரசியல் செய்ய தாங்கள் விரும்பவில்லை என்று தெளிவுபடுத்தும் விதமாக அறிக்கையை வெளியிட்டன.

அரபு நாடுகளும் ஈரானும் 1950களில் இருந்து, சர்ச் சைக்குரிய பாலத்தீனப் பகுதியில் ராணுவ மற்றும் மனிதாபிமான நெருக்கடிகள் வெடித்ததால், மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக எண்ணெயை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்துவது பற்றி விவாதித்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



**எண்ணெய் தடை அரபு நாடுகளுக்கு பயன் தந்ததா?**

மேற்குலக நாடுகளுக்கு அரபு நாடுகள் இரண்டு முறை எண்ணெய் விநியோகத்தை நிறுத்தியுள்ளன. முதலில் 1967இல் ஆறு நாள் போரின்போது விநியோகம் நிறுத்தப்பட்டது.

பின்னர், 1973இல் யோம் கிப்பூர் போரின்போது தடை விதிக்கப்பட்டது. முதல் தடை பலனளிக்க வில்லை, ஆனால் இரண்டாவது தடை ஆழமான விளைவுகளை ஏற்படுத்தியது.

மேற்கத்திய நாடுகளும் அரபு நாடுகளும் இந்தச் சம்பவங்களில் இருந்து பாடங்களைக் கற்றுக் கொண்டன. எனவே, இப்போது யாரும் எண்ணெய் விநியோகத்தை நிறுத்துவது குறித்து உறுதியாகப் பேசுவதில்லை. யாரும் அவ்வாறு செய்யத் தற்போது விரும்பவில்லை.

ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு இஸ்ரேல் தன்னை யாரும் தாக்க மாட்டார்கள் என்று நினைத்தது. அதே போல அரபு நாடுகள் எண்ணெய் விநியோகத்தை நிறுத்தாது என அமெரிக்கா கருதியது. ஆனால் இந்த இரண்டு நம்பிக்கைகளுமே தகர்ந்திருக்கின்றன.

யோம் கிப்புர் போரில் இஸ்ரேல் மீதான தாக்குதலுக்கு பத்து நாட்களுக்குப் பிறகு, அரபு நாடுகள் அமெரிக்கா, நெதர்லாந்து மற்றும் பல மேற்கத்திய நாடுகளுக்கு எண்ணெய் வழங்குவதை நிறுத்தின. இது மட்டுமின்றி பாரசீக வளைகுடாவின் ஷேக்கும் ஈரானின் ஷாவும் எண்ணெய் விலையை 70 சதவீதம் உயர்த்த ஒப்புக்கொண்டனர்.

ஒருபுறம், எண்ணெய் விநியோகம் நிறுத்தப்பட்ட நிலையில், மறுபுறம், அரபு நாடுகளின் எண்ணெய் உற்பத்திக் குறைப்பால், எண்ணெய் விலை ஐந்து மடங்கு அதிகரித்தது.

அந்தக் காலத்தில், உலகின் முக்கிய ஆற்றல் ஆதாரமாக எண்ணெய் திகழ்ந்தது. எண்ணெயின் விலை உயர்வால், உலகப் பொருளாதாரம் சிக்கலில் மாட்டியது.

அமெரிக்கப் பொருளாதாரம் 1973 மற்றும் 1975 க்கு இடையில் ஆறு சதவீதம் சுருங்கியது. வேலையின்மை விகிதம் ஒன்பது சதவீதமாக அதிகரித்தது. இதேபோல், ஜப்பானின் மொத்த உள்நாட்டு உற்பத்தி இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு முதல் முறையாகச் சரிந்தது.

இந்த பிரச்னையால் இந்தியா, சீனா உள்ளிட்ட வளரும் நாடுகளும் அப்போது அதிகம் பாதிக்கப்பட்டன.



மேற்கத்திய நாடுகள், பல ஆண்டுகளாக பணவீக்கத்தின் சுமையை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. இதற்குக் காரணம் எண்ணெய் தடை மட்டுமல்ல, மந்த நிலையும் பணவீக்கமும் போருக்கு முன்பே அதிகரிக்கத் தொடங்கியது. ஆனால் எண்ணெய் விநியோகம் நிறுத்தப்பட்டதால் இந்த நெருக்கடி ஆழமடைந்தது.

ஐந்து மாதங்களுக்குப் பிறகு, மார்ச் 18, 1974 அன்று, இந்தத் தடை இரண்டு முக்கிய காரணங்களுக்காக நீக்கப்பட்டது.

முதலாவதாக, இதனால் ஏற்பட்ட நெருக்கடியால் தங்கள் எண்ணெய்க்கான தேவை முடிவுக்கு வருவதை அரபு நாடுகள் விரும்பவில்லை. அமெரிக்காவும் ஐரோப்பாவும் மத்திய கிழக்கின் எண்ணெய் பற்றாக்குறைக்கு ஏற்ப தங்களை மாற்றிக்கொள்ளத் தொடங்கின. எண்ணெய் உற்பத்தி செய்யும் ஒபெக் நாடுகள் மேற்கத்திய எண்ணெய் நிறுவனங்களின் எண்ணெய் சந்தையில் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டியிருந்தன.

இரண்டாவது காரணம், எண்ணெய் தடையின் முக்கிய நோக்கத்தை அவர்களால் ஒருபோதும் அடைய முடியவில்லை. அமெரிக்காவும் அதன் நட்பு நாடுகளும் இஸ்ரேலுக்கு தொடர்ந்து உதவின. எண்ணெய் விநியோகத்தைத் துண்டிக்கும் அச்சுறுத்தலின் அழுத்தத்தின் கீழ் அமெரிக்கர்கள், இஸ்ரேல், எகிப்து மற்றும் சிரியா இடையே அமைதிக்கான மத்தியஸ்தராக செயல்பட ஆர்வம் காட்டவில்லை.

எண்ணெய் விநியோகத்திற்கான தடை நீக்கப்பட்டவுடன், இந்த முழு பிராந்தியத்திலும் படிப்படியாக அமைதி நிலைநாட்டப்பட்டது.

# ஐ.சி.சி. தடையால் இலங்கை கிரிக்கெட்டின் எதிர்காலம் என்ன ஆகும்?




## ரணில் விக்கிரமசிங்க கூறுவது என்ன?

சிறிலங்கா கிரிக்கெட்டை தடை செய்ய சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐசிசி) கொண்டு வந்த தீர்மானத்தை அடுத்து, அது நாட்டின் அரசியலிலும் அது தாக்கத்தை செலுத்தியுள்ளது.

பிரதேச அரசியல்வாதிகள் முதல் நாடாளுமன்றம் வரை தற்போது சிறிலங்கா கிரிக்கெட் வாரியம் குறித்தே அதிகம் பேசப்பட்டு வருகின்றது.

சிறிலங்கா கிரிக்கெட் நிறுவனத்திற்குள் அரசியல் தலையீடு காணப்படுவதாகத் தெரிவித்து, சிறிலங்கா கிரிக்கெட்டை தடை செய்ய சர்வதேச கிரிக்கெட் பேரவை கடந்த 10ஆம் தேதி நடவடிக்கை எடுத்திருந்தது.

சிறிலங்கா கிரிக்கெட்டை தடை செய்ய சர்வதேச கிரிக்கெட் பேரவை எடுத்த தீர்மானத்தை, சர்வதேச கிரிக்கெட் பேரவையின் நிறைவேற்றுக் குழு அங்கீகரித்திருந்தது.

ஆமதாபாத்தில் கடந்த 21ஆம் தேதி இடம்பெற்ற சர்வதேச கிரிக்கெட் பேரவையின் சிறப்புக் கூட்டத்தின் போதே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது.

**ஐசிசி கூட்டத்தில் என்ன பேசினார்கள்?**

கிரிக்கெட் விளையாட்டில் அரசியல் தலையீடுகளை இல்லாது செய்யும் நோக்கிலேயே சிறிலங்கா கிரிக்கெட்டிற்கு சர்வதேச கிரிக்கெட் பேரவை தடை விதித்ததாக சிறிலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் ஷம்மி சில்வா தெரிவித்துள்ளார்.

ஆமதாபாத்தில் கடந்த 21ஆம் தேதி இடம்பெற்ற சர்வதேச கிரிக்கெட் பேரவை கூட்டத்தில் ஷம்மி சில்வா கலந்துகொண்டிருந்த நிலையில், அந்தக் கூட்டத்தில் எட்டப்பட்ட தீர்மானங்கள் குறித்து தெளிவூட்டினார்.



அவர் கூறுகையில், "முழுமையாக அரசியல் தலையீடு காணப்படுவதாக ஐசிசி கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. இலங்கை பிரச்னை குறித்து 45 நிமிடங்கள் வரை பேசப்பட்டது. இலங்கையில் கிரிக்கெட் மாத்திரம் அல்ல. இலங்கையில் ரக்பியும் தடை செய்யப்பட்டுள்ளதாக கூட்டத்தில் கருத்துகள் தெரிவிக்கப்பட்டன.

அதேபோன்று, இலங்கை கால்பந்தாட்டமும் தடை செய்யப்பட்டுள்ளதாக அங்கிருந்த சட்ட வல்லுநர் ஒருவர் தெரிவித்தார். எனவே இலங்கையில் மூன்று விளையாட்டுகளுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது," என அவர் தெரிவித்தார்.

மேலும், "இலங்கை விளையாட்டுத்துறை அமைச்சருடன் கலந்துரையாடியதாக அங்கிருந்த ஒருவர் தெரிவித்தார். ஆனால், அந்த சந்திப்பில் தமக்கு ஒன்றும் புரியவில்லை என்ற கருத்துகளும் அங்கு கூறப்பட்டது. இதற்கு முன்னர் இவ்வாறே ஜிம்பாப்வே அணிக்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது. இவ்வாறான கடுமையான தீர்மானங்களை எடுக்காத பட்சத்தில், ஏனைய நாடுகளிலும் இவ்வாறான நிலைமை ஏற்படக்கூடும் என்பதைக் கருத்தில் கொண்டே இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது," என அவர் கூறினார்.

இதேவேளை, 19 வயதுக்கு உட்பட்டோருக்கான உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டி எதிர்வரும் ஆண்டு இலங்கையில் நடைபெறவிருந்த நிலையில், அந்தப் போட்டிகளை தென்னாபிரிக்காவில் நடத்த சர்வதேச கிரிக்கெட் பேரவை தீர்மானித்துள்ளது.

"கிரிக்கெட் தடை செய்யப்பட்ட நாடொன்றில் போட்டிகளை நடத்த முடியாது என ஐசிசி அதற்குக் காரணம் தெரிவித்தது," என்று சிறிலங்கா கிரிக்கெட் வாரியத்தின் தலைவர் ஷம்மி சில்வா குறிப்பிட்டார்.




மேலும், சிறிலங்கா கிரிக்கெட்டிற்கு வழங்கப்படும் நிதியைத் தடை செய்ய முதலில் சர்வதேச கிரிக்கெட் பேரவை தீர்மானித்திருந்த பின்னணியில், தான் விடுத்த கோரிக்கையை அடுத்து கடும் கட்டுப்பாட்டுடன் நிதியை வழங்கத் தீர்மானித்ததாகவும் அவர் கூறினார்.

அத்துடன், சிறிலங்கா கிரிக்கெட் நிறுவனத்திற்குத் தடை விதிக்கப்பட்டுள்ள போதிலும், கிரிக்கெட் அணி போட்டிகளில் விளையாட சர்வதேச கிரிக்கெட் பேரவை அனுமதி வழங்கியுள்ளது.

எனினும், கிரிக்கெட் போட்டிகள் குறித்து தாம் அவதானம் செலுத்தியுள்ளதாகவும், எதிர்காலத்தில் நிலைமை பழைய நிலைக்குத் திரும்பாத பட்சத்தில், அதற்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க வேண்டிய நிலைமை ஏற்படும் எனவும் சர்வதேச கிரிக்கெட் பேரவையின் அதிகாரிகள் கூறியதாக சிறிலங்கா கிரிக்கெட்டின் தலைவர் ஷம்மி சில்வா மேலும் கூறினார்.

இலங்கையில் 19 வயதுக்கு உட்பட்டோருக்கான கிரிக்கெட் உலகக் கோப்பை போட்டிகளை நடத்த அனுமதிக்காமையால், நாட்டிற்கு 833 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டுள்ளதாக சிறிலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் ஷம்மி சில்வா குறிப்பிடுகின்றார்.

இலங்கையில் கணக்காய்வாளர் நாயகத்தால் நடத்தப்பட்ட கணக்காய்வு அறிக்கையை, ஐசிசி கணக்காய்வாளர்கள் ஆராய்ந்து, சிறிலங்கா கிரிக்கெட்டில் எந்தவொரு ஊழலும் இடம் பெறவில்லை என்பதை உறுதிப்படுத்தியதாகவும் அவர் தெரிவிக்கின்றார்.

மேலும், அரசியல் தலையீடுகள் காணப்படும் பட்சத்தில், இடைக்கால சபையொன்றை ஏற்படுத்துவதற்கு சர்வதேச கிரிக்கெட் பேரவை இடமளிக்காது என அவர் கூறுகின்றார்.

சிறிலங்கா கிரிக்கெட்டிற்கு நியமிக்கப்பட்டுள்ள இடைக்கால சபையை நிறுத்தும் பட்சத்தில், மீண்டும் சிறலங்கா கிரிக்கெட்டிற்கான அங்கீகாரம் கிடைக்கும் என நிறுவனத்தின் தலைவர் குறிப்பிட்டார்.

இந்த ஆண்டில் கிடைக்கும் என அறிவிக்கப்பட்ட நிதி தொகை, அவ்வாறே கிடைக்கும் எனவும், அடுத்த ஆண்டுக்கான நிதியிலேயே கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளதாகவும் சிறிலங்கா கிரிக்கெட் தெரிவித்துள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணியின் எதிர்காலம் குறித்து தாங்கள் நடவடிக்கை எடுத்து வருவதாக சிறிலங்கா கிரிக்கெட் தெரிவிக்கின்றது.

ஐசிசி எவ்வாறான தீர்மானத்தை எடுக்கும் என்பது குறித்து இதுவரை அவதானம் செலுத்தியிருந்ததாகவும், தற்போது அதற்கான பதில் கிடைத் துள்ளமையால் அடுத்த கட்ட நடவடிக்கைகளைத் தாம் எடுக்க வுள்ளதாகவும் சிறிலங்கா கிரிக்கெட்டின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சிறிலங்கா கிரிக்கெட் வாரியத்தில் ஏற்படுத்தப்படவுள்ள மாற்றங்கள் தொடர்பில் எதிர்காலத்தில் ஊடகங்களின் ஊடாக மக்களுக்கு தெளிவூட்டப்படும் எனவும் அவர் குறிப்பிடுகின்றார்.

**நீதிமன்ற நடவடிக்கை**

சிறிலங்கா கிரிக்கெட் வாரியத்திற்கு விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவால் நியமிக்கப்பட்ட இடைக்கால சபையை தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்குமாறு கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ள நிலையில், அந்த வழக்கு மீதான விசாரணைகள் தற்போது இடம் பெற்று வருகின்றன.

இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுண ரணதுங்க தலைமையிலான 7 பேர் கொண்ட குழுவொன்றே, விளையாட்டுத்துறை அமைச்சரால் நியமிக்கப்பட்டிருந்தது.

இவ்வாறு நியமிக்கப்பட்ட கிரிக்கெட் இடைக்கால குழுவிற்கு எதிராக சிறிலங்கா கிரிக்கெட் நிறுவனத்தின் தலைவர் ஷம்மி சில்வா நீதிமன்றத்தை நாடியிருந்தார்.



இந்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம், இடைக்கால சபை மற்றும் அதற்கான வர்த்தமானி அறிவித்தலை இடைநிறுத்தி வைக்குமாறு உத்தரவு பிறப்பித்திருந்தது.

இதன்படி, இந்த வழக்கு மீதான விசாரணைகள் தொடர்ச்சியாக இடம் பெற்று வருகின்றன.

**ஜெய் ஷாவிடம் மன்னிப்பு கோரிய ரணில்**

இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் செயற்பாடுகளில், இந்திய கிரிக்கெட் வாரியத்தின் செயலாளர் ஜெய் ஷாவிற்கு தொடர்புள்ளதாக, இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுண ரணதுங்க தெரிவித்த கருத்து குறித்து, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஜெய் ஷாவுடன் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளார்.

**ரஞ்சன் அருண் பிரசாத்**

இதன்போது, தான் ஜெய் ஷாவிடம் மன்னிப்பு கோரியதாக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, இந்திய ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் தெரிவித்திருந்தார்.



இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கும், இந்திய கிரிக்கெட் வாரியத்தின் செயலாளர் ஜெய் ஷாவிற்கும் இடையில் தொடர்பு கிடையாது என அவர் குறிப்பிடுகின்றார். இதே வேளை, சிறிலங்கா கிரிக்கெட்டில் நீண்டகாலமாகக் காணப்படுகின்ற பிரச்னையை புதிய சட்டத்தின் ஊடாகவே தீர்க்க முடியும் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவிக்கின்றார். நாடாளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இதைக் குறிப்பிட்டார்.

"இரண்டு குழுக்களுக்கு இடையில் காணப்படுகின்ற பிரச்னை காரணமாகவே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளது. புதிய சட்டமொன்றை கொண்டு வந்து, சட்டத்தின் ஊடாக சரியான குழுவொன்று நியமிக்கப்பட வேண்டும். இந்த வழக்கை அவ்வாறு கொண்டு செல்ல வேண்டாம் என நான் விளையாட்டுத்துறை அமைச்சருக்குக் கூறினேன். அவ்வாறு செய்தால் ஐசிசி இல்லாது போகும், போட்டிகள் இல்லாது போகும், சுற்றுலாத் துறை இல்லாது போகும் எனக் கூறினேன்." எனத் தெரிவித்தார்.

மேலும், "அத்துடன், வழக்கொன்றில் சிக்குண்டால் சிக்கிரம் மீண்டு வர முடி யாது. அமைச்சரவையிலும் இது தொடர்பில் பேசினோம். எனினும், தனக்கு சட்டத்தரணி ஒருவர் வேண்டும் என அமைச்சர் கூறினார். அவர்கள் வழக்கு போடப் போகின்றார்கள். அதனால் சட்டத்தரணி ஒருவர் தேவை.

சட்டமாதிபரும் இருந்தார், முன்னாள் ஜனாதிபதியும் அந்த இடத்தில் இருந்தார். விளையாட்டுத்துறை அமைச்சர் சார்பில் முன்னிலையாகுமாறு சட்டமாதிபருக்கு கூறினோம்," என ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

"நான் ஜெய் ஷாவுடனும் பேசினேன். ஐசிசியுடனும் பேசினேன். அரசியல் தலையீடு உள்ளதாக ஐசிசி கூறுகின்றது. ஷம்மி சில்வாவை பாதுகாக்க வேண்டிய தேவை எனக்கு இல்லை. அமைச்சர் செய்தது சரியா இல்லையா என்பதை நீதிமன்ற தீர்ப்பின் ஊடாகப் பார்த்துக் கொள்ள முடியும்," என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.